TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

செப் 2026

தீபம் 15 சுடர் 04

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.




# தீபகத்திலிருந்து இறையாசீர்

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



## இதயத் தோட்டத்தைக் காப்போம்

### இறைவார்த்தையின் ஒளியில் நம்பிக்கையை வளர்ப்போம்

*"எல்லாவற்றிற்கும் மேலாக உன் இதயத்தைக் காவல் செய்; ஏனெனில் அதனின்றே வாழ்வின் ஊற்றுகள் புறப்படுகின்றன."........ நீதிமொழிகள் 4:23*

அன்பிற்கினிய குழந்தைகளே, இளைஞர்களே, பெற்றோர்களே,

செப்டம்பர் மாதத்தை நாம் விவிலிய மாதமாகக் கொண்டாடுகின்றோம். நமது இல்லங்களில் விவிலியத்தை அலங்கரித்து வைப்பது மட்டும் போதாது அதைத் திறந்து வாசிக்கவும், தியானிக்கவும், வாழ்வாக்கவும் வேண்டும். ஏனெனில் இறைவார்த்தை நம் பாதைக்கு விளக்காகவும், வாழ்க்கைக்கு ஒளியாகவும் இருக்கிறது (திருப்பாடல் 119:105).

நமது இதயம் ஓர் அழகிய தோட்டத்தைப் போன்றது. அதில் நல்ல விதைகளும் விதைக்கப்படலாம் தேவையற்ற களைகளும் வளரலாம். அன்பு, உண்மை, நம்பிக்கை, மன்னிப்பு, தூய்மை, இரக்கம், இறைநம்பிக்கை ஆகியவை நல்ல விதைகள். பொறாமை, கோபம், வெறுப்பு, பொய், சுயநலம், தவறான எண்ணங்கள், தீய பழக்கங்கள் ஆகியவை களைகள். நாம் எதற்குத் தொடர்ந்து தண்ணீர் ஊற்றுகிறோமோ அதுவே நம்மில் வளரும்.

#### இதயத்தின் வாசலைக் காப்போம்

நமது கண்கள், காதுகள், எண்ணங்கள் மற்றும் உறவுகள் வழியாகப் பல செய்திகள் இதயத்திற்குள் நுழைகின்றன. கைப்பேசி, சமூக ஊடகம், திரைப்படங்கள், நண்பர்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் நம்மைத் தொடர்ந்து பாதிக்கின்றன. அனைத்தையும் நாம் தவிர்க்க முடியாது ஆனால் எதை ஏற்றுக்கொள்வது, எதை விலக்குவது என்பதைத் தீர்மானிக்கலாம்.

ஒரு தவறான எண்ணம் நம்மைத் தேடி வரலாம் ஆனால் அதற்கு நம் இதயத்தில் இடம் கொடுப்பதா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். புனித பவுல் கூறுவது போல, "உண்மையானவை, மாண்புடையவை, நீதியானவை, தூய்மையானவை, அன்புக்குரியவை ஆகியவற்றையே எண்ணுங்கள்" (பிலிப்பியர் 4:8).

#### இறைவார்த்தை - நல்ல விதை

இயேசு விதைப்பவர் உவமையில் இறைவார்த்தையை நல்ல விதைக்கு ஒப்பிடுகிறார். நல்ல நிலத்தில் விழுந்த விதை மிகுந்த பலன் தருகிறது (மாற்கு 4:1-20). நமது இதயம் நல்ல நிலமாக மாறும்போது, இறைவார்த்தை நமது சிந்தனை, பேச்சு, செயல்கள் மற்றும் உறவுகளை மாற்றுகிறது.

குழந்தைகளே, தினமும் ஒரு விவிலிய வசனத்தை வாசியுங்கள். அது உங்களுக்கு நல்லதைத் தேர்ந்தெடுக்கக் கற்றுத் தரும்.

இளைஞர்களே, வாழ்க்கையின் நோக்கம், எதிர்காலம், உறவுகள் மற்றும் அழைப்பு பற்றிய குழப்பங்களுக்கு இறைவார்த்தையின் ஒளியில் பதில் தேடுங்கள். சமூக ஊடகத்தின் குரலைவிட இறைவனின் குரலுக்கு அதிக இடம் கொடுங்கள்.

பெற்றோர்களே, பிள்ளைகளுக்கு உணவு, கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றைக் கொடுப்பதைப் போலவே இறைவார்த்தையையும் வழங்குங்கள். குடும்பமாகச் சேர்ந்து விவிலியத்தை வாசித்து, ஒரு வசனத்தைப் பகிர்ந்து, சிறிது நேரம் செபியுங்கள். பெற்றோரின் வாழும் சாட்சியே பிள்ளைகளுக்குக் கிடைக்கும் முதல் நம்பிக்கைக் கல்வியாகும்.

### களைகளை அகற்றுவோம்

ஒரு தோட்டத்தில் நல்ல செடிகள் தானாகவே வளர்வதில்லை. மண்ணைப் பண்படுத்தி, தண்ணீர் ஊற்றி, களைகளை அகற்ற வேண்டும். அதுபோல நமது இதயத்தையும் தினமும் பரிசோதிக்க வேண்டும்.

இன்று நான் எந்த நல்ல விதையை வளர்த்தேன்? எந்தத் தீய எண்ணத்திற்கு இடம் கொடுத்தேன்? யாரையாவது காயப்படுத்தினேனா? யாருக்கு உதவினேன்? இறைவார்த்தை என்னை எந்த மாற்றத்திற்கு அழைக்கிறது?

நமது பலவீனங்களைக் கண்டு மனம் தளர வேண்டாம். அவற்றை இறைவனிடம் நேர்மையாக ஒப்படைக்க வேண்டும். நமது பலவீனம் அருளின் செயல்பாட்டிற்கான இடமாக மாறலாம். இறைவன் நம்மை ஒரே நாளில் முழுமையானவர்களாக மாற்றுவதில்லை நாள்தோறும் சிறிய நற்செயல்களின் வழியாக நம்மை வளர்க்கிறார்.

நம்பிக்கைக் கல்வி வாழ்வாகட்டும் நம்பிக்கைக் கல்வி என்பது சில செபங்களையும் விவிலிய வசனங்களையும் மனப்பாடம் செய்வது மட்டும் அல்ல. அது இயேசுவைப் போலச் சிந்திக்கவும், பேசவும், மன்னிக்கவும், பகிரவும், பிறருக்கு உதவவும் கற்றுக்கொள்வதாகும். இறைவார்த்தை அறிவை மட்டும் கொடுக்காமல், நமது பண்பையும் வாழ்வையும் மாற்ற வேண்டும்.

இந்த விவிலிய மாதத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறிய முடிவை எடுப்போம்:
தினமும் குறைந்தது ஒரு விவிலியப் பகுதியை வாசிப்போம்.
ஒரு வசனத்தைத் தேர்ந்தெடுத்து குடும்பமாகப் பகிர்ந்துகொள்வோம்.
வாரம் ஒருமுறை குடும்ப இறைவார்த்தைச் செபம் நடத்துவோம்.
வாசித்த இறைவார்த்தையை ஒரு நற்செயலாக வாழ்வாக்குவோம்.
நமது இல்லத்தை அன்பு, மன்னிப்பு, ஒற்றுமை நிறைந்த இதயத் தோட்டமாக மாற்றுவோம்.

இறைவனே நமது வாழ்க்கையின் உண்மையான தோட்டக்காரர். அவரது வார்த்தையே விதை, நமது இதயம் நிலம், செபம், தண்ணீர், நற்குணங்கள் - கனிகள். அவர் விதைக்கும் ஒவ்வொரு நல்ல விதையையும் அன்போடு பாதுகாத்து வளர்ப்போம்.

இந்தச் செப்டம்பர் மாதம் நமது இல்லங்களில் விவிலியம் திறக்கப்படும் மாதமாக மட்டுமல்லாமல், நமது இதயங்கள் இறைவனுக்குத் திறக்கப்படும் மாதமாகவும் அமையட்டும்.

**இறைவார்த்தையை வாசிப்போம்!**
**இதயத்தில் விதைப்போம்!**
**வாழ்வில் கனிகொடுப்போம்!**

அன்பும் செபமும் கலந்த வாழ்த்துகளுடன்,

*முனைவர் அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*
*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 05.09.2026 | கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா - திருப்பலி | 06 |
| 06.09.2026 | பொதுக்காலம் 23வது ஞாயிறு - திருப்பலி | 07 |
| 08.09.2026 | புனித கன்னிமரியாவின் பிறப்பு விழா -திருப்பலி | 08 |
| 12.09.2026 | புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் - திருப்பலி | 10 |
| 13.09.2026 | பொதுக்காலம் 24வது ஞாயிறு - திருப்பலி | 11 |
| 14.09.2026 | திருச்சிலுவையின் மகிமை திருவிழா - திருப்பலி | 13 |
| 15.09.2026 | அன்னை மரியாவின் துயரங்கள்- திருப்பலி | 14 |
| 17.09.2026 | புனித இராபர்ட் பெல்லார்மின் - திருப்பலி | 15 |
| 20.09.2026 | பொதுக்காலம் 25வது ஞாயிறு - திருப்பலி | 16 |
| 21.09.2026 | புனித மத்தேயு - நற்செய்தியாளர் விழா - திருப்பலி | 18 |
| 22.09.2026 | அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்கள் - திருப்பலி | 19 |
| 26.09.2026 | புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான் | 20 |
| 27.09.2026 | பொதுக்காலம் 26வது ஞாயிறு - திருப்பலி | 21 |
| 29.09.2026 | முப்பெரும் அதிதூதர்கள் திருவிழா -திருப்பலி | 23 |
| 30.09.2026 | புனித ஜெரோம் - திருப்பலி | 24 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| அன்னை தெரேசா - புனிதையாகும் தேவதை | 28 |
| புனித மத்தேயு வாழ்வு தரும் பாடம் | 31 |
| அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது குழுவினர் | 34 |
| திருஅவைச் செய்திகள் | 37 |
| மனித மாண்பைக் காப்போம் | 39 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா மற்றும் ஆசிரியர் தின விழா

திருப்பலி
05.09.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறையேசுவின் அன்புக்குரியவர்களே, இன்று ஆசிரியர் தினவிழாவைச் சிறப்பிக்கும் நாம், ஆசிரியராய் பணியாற்றி அருள் வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்ட புனித அன்னை தெரசாவின் திருவிழாவையும் சிறப்பிக்கின்றோம். அன்னை தெரேசா நம் காலத்து புனிதை, நம்மோடு வாழ்ந்து நம் நாட்டின்மீது தனிப்பற்றுக் கொண்டு இயேசுவின் பணியான "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதை" தன் வாழ்க்கையில் வாழ்ந்துக் காட்டிய புனிதை என்றும் கூறலாம். தனது 18ம் வயதில் இந்தியாவிற்கு வந்து தனது பிறரன்பு பணியை சிறப்பாக செய்து வந்தவர் என்பது நமக்கு தெரியும். அவர் அடிக்கடி சொன்ன வார்த்தைகள், "வழிபாடு செய்யுங்கள்... கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம்... சேவை செய்யுங்கள்... கடவுள் உங்கள் அருகில் வருவார்". பல சூழல்களில் நாம் சேவை செய்ய வேண்டிய நேரங்களில் சாக்கு போக்குகளை சொல்லி தப்பித்துக் கொள்ளவே நினைக்கின்றோம். இதோ இன்றைய வாசகங்கள் நமக்கு பதில் தருகின்றன. ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? என்ற இயேசுவின் இந்த கேள்விக்கு சமூகத்தின் தலைவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. ஓய்வு நாள் கூட்டம் உட்பட அனைத்து சடங்குகளும் மனித நலனுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. இதை மனதில் இருத்தி மனித நேயம் புதுமலர்ச்சி பெற வேண்டுமென்று தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, திருஅவையின் தலைவர்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்கரம் ஒப்படைக்கின்றோம். இவர்கள் தங்களின் கடமையை உணர்ந்து மனிதர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இறைஞானத்தை அவர்களில் வளர்த்திடவும், மக்களின் பாவ வாழ்விலிருந்து மீட்படைய உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் வழிகாட்டியே எம் இறைவா, ஆசிரியர் பணிசெய்யும் ஒவ்வொருவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். தங்களின் பணி இறைவனின் செல்வத்தை சேர்க்கும் பணி என்பதை உணர்ந்து, தாராள சேவை மனதுடன் தங்களிடம் வரும் பிள்ளைகளுக்கு கல்வி கற்க உதவி புரியும் மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அனைத்திற்கும் அன்னையாக இருந்து காப்பவரே, எங்கள் பங்குத் திருஅவையில் உள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர்

ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழவும், துன்பமும் இன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்ற வாழ்வியல் கலையை அன்னை தெரேசா எமக்கு கற்றுத்தந்துள்ளார் அதை வாழ்வாக்கியும் காட்டியுள்ளார். அவரைப்போல் நாங்களும் துன்பத்தைத் தாங்குவதன் மூலமாக அதையும் இன்பமாக மாற்றும் அருள்பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு

திருப்பலி
06.09.2026

**முன்னுரை** *திருமதி. லதா சுரேஷ்*

I. *எசே. 33: 7-9* II. *உரோ. 13: 8-10* *மத். 18: 15-20*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, அன்பு என்பது கடவுளின் தன்மையாகவும், மனித வாழ்க்கையின் அடிப்படையாகவும் உள்ளது. தேவன் அன்பாகவே இருக்கிறார், தன் அன்பைப் போன்றே ஒருவர்மீது ஒருவர் உண்மையான அன்பு செலுத்த வேண்டுமென்று இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு கற்றுத் தருகின்றது. இறைவனின் தலையாய கட்டளை நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்புக்கூறுங்கள் என்பதே. அந்த அன்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்றால் தன் எதிரியையும் நேசிக்கும் படியும், தங்களை சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கும் அளவிற்கு அன்பு இருக்க வேண்டும்.

நாம் பயணம் செய்கின்றபோது சாலை விதிகளை கடைப்பிடிப்பது கட்டாயம். அதில் எந்தவொரு சலுகையோ விலக்கோ இல்லை. அதைப்போன்றே மனிதனின் வாழ்நாள் பயணத்தில் இறைவன் நமக்குக் கொடுத்த சட்டத்தில் தலையானது பிறரன்பு. இது சட்டம் மட்டுமல்ல, இறைவனின் கட்டளையும். ஏனெனில் தன் பிள்ளைகள் ஒருவர்கூட நெறிதவறிப்போகக் கூடாது என்பது விண்ணகத் தந்தையின் திருவுளம். ஒருவர் ஒருவர்மீது அன்பு காட்டுவதால் யாரும் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டார்கள் அல்லவா.

அன்பே கடவுள் அன்பில்லாத ஒருவனால் இறைவனை அறிய முடியாது. இறைவனை அறிந்தவர்களே அவரை அன்பு செய்ய முடியும். மேலும் தன் உடன் பிறந்தோர் மற்றும் அடுத்திருப்போர்களையும் அன்பு செய்ய முடியும். இறைவனின் திருச்சட்டத்தை கடைப்பிடித்து, திருச்சட்டத்தின் நிறைவு என்பதை உணர்ந்து இறைவனை ஒன்று கூடி துதிப்பார்கள். அவர் நாமத்தை போற்றுவார்கள். நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதன்மூலம் ஆண்டவரின் திருச்சட்டத்தை முழுமையாக ஏற்று அன்பின் நெறிமுறைகளை அறிந்து கடைப்பிடிக்க, இறையுறவில் நிலைத்திருக்க இத்திருப்பலியில் இணைந்து பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, அன்று இறைவாக்கினர் எசேக்கியலை எவ்வாறு இறைவன் தன் மக்களின் மீட்புக்காக பயன்படுத்தினாரோ அதைப்போன்று இன்று உம் இறைத்திட்டத்தை நிறைவேற்றும் மீட்பர்களாக பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைச்சித்தத்தின் பொருளுணர்ந்து பணிவாழ்வின் மேன்மையை அறிந்து வாழ்ந்திட தேவையான அருளாசீரை வழங்கி காத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பகைவரையும் அன்பு செய்யுங்கள் என்றுரைத்த எம் இறைவா, உலகில் பல்வேறு நாடுகளில் நடக்கும் போர்களினால், தங்கள் குடும்பங்களையும், வீட்டாரையும், உறவுகளையும் பிரிந்து வாடும் வீரர்களுக்காகவும் போரில் பிடிப்பட்டு, சிறையில் வேதனையில் வாடுவோரையும், போரில் ஊனமுற்றோர், பெற்றோர்களை இழந்து வாடும் குழந்தைகளுக்காக மன்றாடுகிறோம். போர்கள் சண்டைச்சச்சரவு இல்லாத சமாதான உலகையாளும் தலைவர்களின் உள்ளங்களில் அன்பை மலரச் செய்யும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் ஊற்றே எம் இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள் சுயநலம் இல்லாத சகோதர மனப்பான்மையோடு செயலாற்ற அருள்தாரும். சாதி, மதம், இனம், மொழி என்ற பேதங்களை அகற்றி அனைவரும் சமம் என்ற அன்புணர்வு நாட்டில் மேலோங்க செய்யும் நல்லாட்சியின் வித்துக்களாக அவர்களை மாற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. உறவுகளின் சங்கமமே எம் இறைவா, குடும்பம் என்பது கடவுளின் கொடை, எத்தனையோ குடும்பங்களில் உறவுகள் இருந்தும் தனிமையில் வாடுகின்றனர். பிள்ளைகள், பெற்றோர்கள் இருந்தும் முதியோர் இல்லங்களிலும் அநாதை விடுதிகளிலும் அன்பின்றி தவிக்கும் அவலங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலை மாறி ஒருவர் ஒருவரைப்புரிந்து அன்பு செலுத்திடவும், அன்பின் சங்கமம் ஆகா குடும்பங்கள் மாறி மகிழ்ச்சியில் திளைத்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித கன்னிமரியாவின் பிறப்பு விழா

திருப்பலி
08.09.2026

### முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறையேசுவின் இனிய சொந்தங்களே, உங்கள் அனைவருக்கும் அன்னை மரியாளின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். இன்று செப்டம்பர் 8ம் நாள் கலிலேயாவில் உள்ள நாசரேத் ஊரைச் சேர்ந்த சுவக்கின் அன்னாள்

தம்பதியின் ஒரே மகள் அன்னை மரியாளின் பிறந்த நாள் விழா. "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும்முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்" என்று எரேமியாவில் கூறப்பட்டது போன்று இறைவன் கருவிலேயே ஒவ்வொரு குழந்தையையும் திருநிலைப்படுத்துகிறார். அன்னை மரியாளையும் கருவாகி உருவானபோதே இறைவன் தனது அருளை நிறைவாக வாரி வழங்கினார். அன்னை மரியாளின் பிறப்பு சிறப்புமிக்கது. காரணம், உலக மீட்பரை ஈன்றெடுப்பதற்கென்றே கடவுளால் அன்னை மரியாள் படைக்கப்பட்டாள். இந்த பிறப்பு விழாவானது தாயின் அன்பையும், ஆறுதலையும், அக்கறையையும், அர்ப்பணத்தையும், பரிந்து பேசுதலையும், பணிவிடை புரிவதையும் நமக்கு உணர்த்துகிறது.

புனித அகுஸ்தினார் மரியாளை ஏவாளுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். ஏவாளால் ஏற்பட்ட பாவம் அன்னை மரியாளால் தீர்க்கப்பட்டது. ஏனென்றால் மாசுமருவற்ற இயேசுவை ஈன்றெடுத்தார். அன்னை மரியாள் கடவுளின் பார்வையில் விலையேறப்பெற்றவள். இதுதான் இறைவனின் பார்வை, கருணை, உலகினரின் பார்வையில் மிகச்சிறிய வயதுடைய அன்னை மரியாவை இறைவன் தேர்ந்தெடுத்து பெருமைப் படுத்தினார். அவரது பிறப்பு நம் அனைவருக்கும் நம்பிக்கையைத் தருகிறது. நாம் எவ்வளவுதான் சிறியவராக, ஆற்றல் குறைந்தவராக இருந்தாலும் இறைவன் நினைத்தால் நம்மை உயர்த்துவார். மரியாவுக்கு செலுத்தும் சிறப்பு வணக்கம் கடவுளுக்கு நாம் அளிக்கின்ற ஆராதனைக்கு நிகராகாது. ஏனெனில் கடவுள் நம்மைப் படைத்து காத்து பாவத்திலிருந்து மீட்கிறவர். அவரிடமிருந்தே நாம் புறப்படுகிறோம். அவரை நோக்கியே நம் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது.

இத்தகைய வல்லமைமிக்க கடவுள் மரியாவைத் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்தார். அவரைத் தம் திருமகனின் தாயாக நியமித்தார். மரியாவும் இறைத்திட்டத்திற்கேற்ப தம்மையே முழுமையாக இறைவனிடம் கையளித்தார். இவ்வாறு நமக்கு ஓர் முன்னுதாரணமானார். இயேசுவின் தாய் நம் தாயாகவும் திருஅவையின் தாயாகவும் இருக்கிறார். உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களுடனே நான் இருப்பேன் என்று வாக்களித்துள்ளார். தமது செபத்தாலும், பரிந்துரையாலும், ஆலயங்களிலும் அன்னைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு காரணம் அன்னை தம் மக்கள்மீது வைத்துள்ள அளவுகடந்த பாசம். ஒரு தாயின் அன்பை அளவிடமுடியாது அது அனைத்தையும் கடந்து எதனையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பண்புக் கொண்டது. அத்தகைய தாயிடம் நம்மை ஒப்படைத்து நமக்குத் தேவையானதை இறைமகனிடம் பெற்றுத்தர வரம் வேண்டி அன்னையின் பிறந்த நாளை இத்திருப்பலி வழியாக மகிழ்வோடு கொண்டாடுவோம், இறையாசீர் பெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணகத் தந்தையே எம் இறைவா, இறைமகன் இயேசுவின் தாயை திருஅவையின் தாயாக கொடுத்தீரே, அந்தத் தாயின் பரிந்துரை மூலம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்,

துறவறத்தார் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் பணிசெய்யும் துறவறத்தார் அனைவரும் மக்களுக்காக எடுக்கும் முயற்சிகளிலும் உமது ஆசீரையும் அருளையும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆற்றலும் அன்பும் மிக்க எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தங்களது சுய இலாபத்திற்காக உழைக்காமல் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு பல்வேறு பணித்திட்டங்களை மேற்கொண்டு நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்ல தேவையான அனைத்து உதவிகளையும் அன்னை மரியாளின் பரிந்துரையோடு பெற்றுக்கொள்ள உதவிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கை சீற்றங்கள் போர்கள் மூலம் தனது உறவுகள், உடமைகள் அனைத்தையும் இழந்து அநாதைகளாக நிற்கும் மக்கள் அனைவரையும் கரம் நீட்டி உதவி செய்யும் உதவிக்கரங்கள் அனைத்தையும் அன்னை மரியாளின் பரிந்துரை மூலம் பெற்றுக்கொள்ள உதவி புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித மரியாவின் தூய்மைமிகு பெயர்

திருப்பலி
12.09.2026

## முன்னுரை

*திரு. ச. ஜான் போஸ்கோ*

அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே! இன்றைய இரண்டு வாசகங்களும் நம் கிறித்தவ வாழ்வின் உண்மைத் தன்மையை ஆழமாகச் சிந்திக்க அழைக்கின்றன. முதல் வாசகத்தில் (1கொரி.10:14-22), திருத்தூதர் பவுல், இரட்டை நிலைப்பாட்டைக் கண்டிக்கிறார். திருவிருந்தின் கிண்ணத்திலும், பேய்களின் கிண்ணத்திலும் ஒரே நேரத்தில் எப்படி பங்கெடுப்பது? ஊழல் என்கிற பேய் வசதி படைத்த மக்களால் வளர்க்கப்பட்டு ஏழை மக்களின் வாழ்வு சூறையாடப்பட்டுச் சுரண்டப்படுகிறது. ஆகவே, லஞ்சம், ஊழல் இவற்றிற்குத் துணைபோகின்ற கிறித்தவர்கள் முதலில் மனம் மாற வேண்டும். ஊழல் எனும் பேயின் கிண்ணத்தைப் புறக்கணிக்கத் தயாராக வேண்டும். எந்த சூழ்நிலையிலும் லஞ்சம் கொடுக்க மாட்டேன்; லஞ்சம் வாங்கமாட்டேன் என்று உறுதியுடன் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் திருவிருந்தில் பங்கேற்பவர்கள் உலகின் பொய்யான மதிப்புகளுடனும் சமரசம் செய்ய முடியாது என்பதை வலியுறுத்துகிறார். நற்செய்தியில் (லூக்கா 6:43-49), இயேசு நல்ல மரம் நல்ல கனியைக் கொடுப்பதையும், தம் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செயல்படுபவன் பாறையின் மேல் வீட்டைக் கட்டிய ஞானியைப் போன்றவன் என்பதையும் எடுத்துரைக்கிறார். உண்மையான கிறித்தவ நம்பிக்கை வெறும் வார்த்தைகளில் அல்ல; அது நம் வாழ்க்கையின் செயல்களிலும், உறுதியான

அடித்தளத்திலிருந்து சாட்சிய வாழ்வாக வெளிப்பட வேண்டும். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்காதவர் கிறித்தவ நம்பிக்கையில் அடித்தளமில்லாமல் மண்மீது வீடு கட்டியவருக்கு ஒப்பாவர். எனவே, ஆண்டவரின் திருவிருந்தில் பங்கேற்கும் நாம், அவருக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்களாக, அவரது வார்த்தையை வாழ்வில் செயல்படுத்தி, நல்ல கனிகளைத் தரும் சீடர்களாகவும், பாறையின்மீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டியவர்களைப் போல வாழ இத்திருப்பலியில் இறையருளை வேண்டி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, உம்மால் படைக்கப்பட்டு அதற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து வழிநடத்திக் கொண்டிருக்கும், திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் திருஅவையை வழிநடத்த தேவையான அனைத்து அருட்கொடைகளையும் நிறைவாக அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, இவ்வுலகில் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமான சூழ்நிலையில், லஞ்சம், ஊழல், ஏமாற்றுதல், பழிவாங்குதல் போன்ற பலவிதமான ஊழல்களும், வன்முறைகளும் ஒழிந்து, நாட்டில் ஒற்றுமை, சமாதானம், சகோதரத்துவம் நிலவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இளைய தலைமுறையினரை ஆசீர்வதித்து வழிநடத்துபவரே, நீர் அவர்களோடிருந்து அவர்கள் செய்கின்ற செயல்களிலும், செல்கின்ற வழிகளிலும் எவ்வித தடைகள், தொந்தரவுகள் ஏற்பட்டாலும் அவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுத்து உமக்கேற்ற பாதையில் நாளும் நடந்து, உமக்கும் நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லதொரு எதிர்காலத் தூண்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 24வது ஞாயிறு

திருப்பலி
13.09.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

*I. சீஞா. 27: 30-28:7 II. உரோ. 14: 7-9 மத். 18: 21-36*

இன்று நம் திருஅவை பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலியில் பங்கெடுக்க அழைத்திருக்கிறது. முதல் வாசகமான சீராக்கின் ஞானநூலில் நமக்கு மன்னிப்பின் மாண்பை விளக்குகிறது. அடுத்திருப்பவர் செய்யும் அநீதியை நாம் மன்னிக்கும்போது ஆண்டவரும் நம்மை நம் பாவங்களிலிருந்து விடுவித்து மன்னித்து வருவார் என்றே எடுத்தியம்புகிறது. மற்றவர்மீது இரக்கம்

காட்ட தவறும்போது ஆண்டவர் நம்மீது எப்படி இரக்கம் காட்டுவார். ஆகவே அடுத்தவர்மீது சினம் கொள்ளாமலும் ஆண்டவரின் கட்டளைகளை கடைப்பிடித்தும் அவருடைய உடன்படிக்கையை கருத்தில் கொண்டும், மற்றவர் குற்றங்களைப் பொருட்படுத்தாமலும் இருப்பதே சாலச்சிறந்தது என்று முதல் வாசகம் நம்மை வலியுறுத்துகிறது. இரண்டாம் வாசகமான உரோமையிலும் புனித பவுல், நாம் வாழ்வதும், இறப்பதும் கிறிஸ்துவுக்காகவே, ஏனெனில் இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே, கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார் என்று கூறுகிறார்.

நற்செய்தியாளர் மத்தேயும், தனது நற்செய்தியில் புனித பேதுரு, ஒருவரையொருவர் எத்தனைமுறை மன்னிக்க வேண்டுமென்று இயேசுவிடம் கேட்கும்போது, ஏழு எழுபதுமுறை மன்னிக்க வேண்டும் என்று இயேசு கூறியுள்ளார். நமக்கு தீங்கிழைத்தோரை மன்னிப்பது அவ்வளவு எளிதானல்ல, இருப்பினும் நாம் பிறரை மன்னிக்க அழைக்கப்படுகிறோம். இறைத்தந்தையின் மன்னிப்பை நாம் பெறும்போது, பிறரை மன்னிப்பது எளிதுதான். நம்மை எப்போதும் மன்னிப்பவர் நம் ஆண்டவர், நாமும் பிறரை மன்னிக்க வேண்டாமா? இதை உணர்ந்து நாம் மன்னிக்க வேண்டிய நபர்களை மனதில் இருத்தி, தூய மனதுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம், பிறரை மன்னிக்கும் நம்மை ஆண்டவரும் மன்னிப்பார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியுடன் மன்றாடுகிறோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தையின் உடல் நலத்திற்காகவும், இவரின் பணிகளுக்காகவும் சிறப்பாக இந்நேரத்தில் மன்றாடுகிறோம். இவர்களின் எல்லையற்ற அன்பையும், இரக்கத்தையும் அறிந்து கருணை, மற்றும் மன்னிப்பின் கலங்கரை விளக்காக திகழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிப்பின் மாபரனே, எங்களிடையே உள்ள குற்றங்குறைகளை பாவங்களை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். நாங்கள் மன்னிக்க தயங்கும் எண்ணத்தை மாற்றி மன்னிக்கும் தாராள உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியும் நேர்மையும் கொண்டவரே, உமது இரக்கத்தையும், பரிவையும் எங்களிடையே ஏற்படுத்தி, மன்னிக்க மனமின்றி வெறுப்போடும், தவறுகள் நிறைந்த வாழ்வுமுறையை தேர்ந்தெடுத்து வாழும் இளம் தலைமுறையினரை உமது நீதியின்படி தண்டிக்காமல் மன்னித்து தூய வாழ்வு வாழ மாற்றியருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கமே உருவான இறைவா, அறியாமல் செய்த சில தவறுகளுக்காக மன்னிக்கும் மனதையும், சிறுவயதிலே தங்களின் வாழ்வின் நோக்கத்தை

புரிந்துக்கொள்ளாமல் காலச்சூழ்நிலைக்கேற்ப வாழ்வை அழித்துக்கொள்ளும் இளைஞர்களை மனம் மாற்றி தங்களின் வாழ்வை உமக்கேற்ற பாதையில் நடத்தியருள உமது தூய ஆவியின் அருட்கொடைகளை பொழிந்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## திருச்சிலுவையின் மகிமை திருவிழா

திருப்பலி
14.09.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இனியவர்களே, இன்று நாம் தாய் திருஅவையுடன் இணைந்து "திருச்சிலுவையின் மகிமைப் பெருவிழாவை" மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். யூதர்கள் அருளடையாளங்களையும், கிரேக்கர்கள் ஞானத்தையும் தேடி அலைய, நாமோ சிலுவையில் அறையுண்ட இயேசுவை மட்டுமே அறிவிக்கிறோம். அவமானத்தின் சின்னமாகவும், கொடூரமான தண்டனையாகவும் கருதப்பட்ட சிலுவை, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன் திரு இரத்தத்தால் அதைச் சுமந்து உயிர் விட்டதனால், இன்று நமக்கு மீட்பின் மகத்துவ அடையாளமாக மாறியுள்ளது. நம் வாழ்வின் பல சோதனைகளையும், துயரங்களையும் சிலுவை நாதரின் திருச்சிலுவை பார்வையில் தாங்கிடவும், அவர் தந்துள்ள சிலுவை வழியாக நிலை வாழ்வைப் பெற்றிடவும் இத்திருப்பலியில் சிறப்பான முறையில் இணைந்து செபிப்போம். வாருங்கள், நம் வாழ்வைச் சிலுவையின் ஒளியில் வழிநடத்த இறைவனின் அருளை வேண்டுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத்தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியர் அனைவருக்கும் நீர் உமது ஆவியின் பலத்தை தாரும். அவர்கள் சிலுவையின் செய்தியைத் தைரியமாகவும் தூய அன்போடும் உலகிற்குப் பறைசாற்றிட அருள்தாரும் என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிகாட்டும் ஊற்றே எம் இறைவா, எங்கள் நாட்டை ஆளும் தலைவர்களுக்கு ஞானத்தையும், நீதியான சிந்தனையையும் தந்து அவர்கள் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வன்முறைகளை ஒழித்து அமைதியை நிலைநாட்டவும் உமது திருக்கரத்தால் அவர்களை வழிநடத்துவீராக என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. உடனிருக்கும் தெய்வமே எம் இறைவா, பல்வேறு சிலுவைகளான நோய்களையும், மனவேதனைகளையும் சுமந்து தவிக்கும் மக்களுக்கு உமது திருச்சிலுவையின் வல்லமையால் நற்சுகமும் மன அமைதியும் அளிக்க ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

# அன்னை மரியாவின் துயரங்கள்

திருப்பலி
15.09.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று வியாகுல அன்னையின் திருநாளைக் கொண்டாட நாம் அனைவரும் ஒன்றுக் கூடியுள்ளோம். வியாகுலம் என்பது தன்னலமில்லாமல் பிறருக்காக தன் வாழ்வையே அளித்து, இறைச்சித்தத்தை ஏற்று நிறைவேற்றும் பொருட்டு படும் துன்பங்களே. வியாகுலம் என்னும் சொல்லுக்கு துக்கம், கவலை, மனத்துயர் எனப் பொருள் கொள்ளலாம். அவ்வகையில் உலகில் ஒரு தாய் அனுபவிக்கக் கூடாத சொல்லொண்ணாத் துயரங்களை சுமந்தவர் நம் அன்னை மரியாள். அதனாலேயே வியாகுல அன்னையைக் குறித்துக் காட்டும்போது துயரத்துடனும், கண்ணீருடனும் ஏழு வாள்கள் அன்னையின் இதயத்தை ஊடுருவி இரத்தம் கொட்டுவது போலவும் காட்சிகளை நாம் காண முடிகின்றது. இந்த ஏழு வரங்கள் அன்னையின் ஏழு மிகப் பெரிய துயரங்களை நினைவூட்டுகின்றது. உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்ற இறைவாக்கினர் சிமியோனின் வாக்கு, அவர் இயேசுவைக் கருத்தாங்கிய நாளிலேயே தொடங்கிவிட்டது.

கல்வாரிப்பயணம், சிலுவையடியில், இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகும் அன்னை பல்வேறு சூழ்நிலைகளில் துன்ப துயரங்களை தம் வாழ்வில் சந்தித்தார். அதன் வழியாக பல பாடங்களையும், படிப்பினைகளையும் நமக்கு அளித்துள்ளார். தன் துயரங்கள் வழி இறைவழி காட்டுதலை உலகிற்கு அளிக்க பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த ஏழு வணிகர்களுக்கு அன்னை மரியாள் தனித்தனியே காட்சித் தந்து செனாரியோ என்ற மலைக்கு வரும்படி அழைத்தார். அங்கே ஒன்று கூடிய எழுவரும் செபிப்பதையும், வியாகுலங்களின் பக்தியைப் பரப்புவதையும், மக்களைப் பாவத் தீமையிலிருந்து விடுவிப்பதையும் தங்களது முதற்கடமையாகக் கொண்டிருந்தனர். அவர்கள் வாழ்வு இறை ஊழியர்களாகிய மரியன்னைக்கு ஊழியம் புரிவதாக இருந்ததால் அன்னை தாமே வெளிப்படுத்திய மரியின் ஊழியர் என்ற பெயரையே அவர்கள் முழுவிருப்பத்துடன் தமதாக்கிக் கொண்டனர். இவ்வாறு தொடங்கிய வியாகுல அன்னையின் பக்தி கி.பி. 1814, திருத்தந்தை 7ம் பத்திநாதர் இப்பக்தி முயற்சியை கொண்டாட மக்களுக்கு அறிவித்தார். இப்பக்தி முயற்சியில் நாமும் இணைவோம், அன்னையின் வியாகுலங்கள் நமக்கு ஆற்றலையும், அஞ்சா நெஞ்சத்தையும், துணிவையும் அளிக்க வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் இறைவா, உம்மீட்பு திட்டத்திற்கு ஆம் என்று சொல்லி தன்னையே தாழ்த்தி பாடுகளைச் சுமந்த அன்னை மரியின் மாண்பினை

ஏற்று திருஅவையின் தூண்களாக இருந்து செயல்படும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் தங்கள் பணிவாழ்வில் ஏற்படும் இடையூறுகள், சிக்கல்கள், பிரச்சனைகள், பலவிதமான துன்பங்களிலிருந்து இவர்களைக் காத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இன்று உலக மாந்தர்கள் சுமக்கும் சிலுவைகளை வறுமை, பிணி, வன்முறை, அடக்குமுறை, இயற்கையை சீரழித்தல் போன்றவற்றை அறிவியல் கண்டுப்பிடிப்புகளால் அழித்துக்கொண்டிருக்கும் உம் மக்களை கண்ணோக்கும். இவர்கள் தங்களின் அறிவியல் திறமையால் நல்லவற்றிற்காக பயன்படும்படி செயல்படக்கூடிய நல்ல ஞானத்தையும், ஆற்றலையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணைக் கடலே எம் இறைவா, இன்றைய வாழ்வில் எங்கள் உடன்பிறந்தோர், அருகில் வாழ்வோர், உடன்பணிப்புரிவோர், உற்றார் உறவினர்களின் துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல், அவர்களுக்கு ஆறுதலாகவும் பக்கபலமாகவும் இருந்து உதவிடும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## புனித இராபர்ட் பெல்லார்மின்

திருப்பலி
17.09.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

நமது தாயாம் திருஅவை இன்று நினைவு கூறும் புனித இராபர்ட் பெல்லார்மின் சிறந்த மக்கள் ஆயராகவும், அனுபவமிக்க வல்லுநரான பேராசியராகவும் விளங்கியவர். இறையியலில் வல்லுநரான இவர் பல்வேறு நூல்களாலும் நற்பண்புகளாலும் கிறிஸ்தவ நம்பிக்கையை ஒளிரச் செய்த உத்தமர் ஆற்றல் மிக்க அனுபவ மேதை. இத்தாலியில் 1542ம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் பிறந்தார். தமது 18வது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். அறிவாற்றல் பெற்ற புனிதர் பெல்ஜியத்தின் லுவேயின் பல்கலைக்கழகத்தில் முதன்மைப் பேராசிரியர் பதவியேற்றார். 1598ம் ஆண்டு தமது திடமான நம்பிக்கை வாழ்வாலும், வழிகாட்டுதலாலும் சிறப்புப் பெற்று கர்தினால் பட்டம் பெற்றார். புனித அலோசியஸின் ஆன்மிக குருவானவர் இவரே. 1621ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் இறைவனோடு முடிவில்லா வாழ்வில் இணைந்தார். இவர் இன்றைய இறைவார்த்தையின் உவமைப்படி நல்ல நிலத்தில் விளைந்து நூறு மடங்காகப் பலன் கொடுத்தவர். இப்புனிதரைப்போல் நாமும் இறைவார்த்தைகள் விதைக்கப்படும் நல்ல நிலம் போன்று பண்பட்டு, பக்குவப்பட்டு மனமாற்றம் அடைவோம். இப்புனிதரின் நினைவு நாளில் நமது நம்பிக்கையை வாக்களித்து, பக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இரக்கமே உருவான இறைவா, திருஅவையைத் தொடர்ந்து இரக்கச் செயல்களிலும், இரக்கத்தின் கலாச்சாரத்திலும், ஏழைகள்மீது அளவில்லா அக்கறைக்கொண்டு வழிநடத்திவரும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் ஒப்புரவு அருளடையாளத்தில் இரக்கப் பண்பை வெளிப்படுத்தி, நம்பிக்கை உணர்வோடு ஒன்றித்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நானே வாழ்வின் வழியென மொழிந்த இறைவா, உம் மக்கள் அனைவரும் நல்ல நிலத்தில் விதைக்கப்படும் விதைகளாக நல்ல விளைச்சலைக் கொடுக்க தயார் நிலையில் இருக்கவும் வளமான அரசியல், ஆன்மிக வாழ்வுத்தர நாட்டுத்தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், ஆன்மிகத் தலைவர்கள் கறைபடாத வாழ்க்கை வாழ்ந்துக் காட்டவும் தேவையான வரங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வானக மருத்துவரே இறைவா, இன்றைய நவீன உலகில் தீராத நோயினால் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் அரசும், சட்ட நிபுணர்களும் கடவுளுக்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபடாமலிருந்து மனச்சான்றின்படி நடக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 25வது ஞாயிறு

திருப்பலி
20.09.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எசா. 55: 6-9* II. *பிலி. 1: 20-24, 27* *மத். 20: 1-16*

இறைநம்பிக்கையாளர்களே, இன்று நாம் கொண்டாடும் பொதுக்காலம் 25ம் ஞாயிறு திருவழிபாடு, இறைவனின் எல்லையற்ற கருணை, மனித மதிப்பீடுகளைத் தாண்டிய நீதி அனைவரையும் சமமாக நேசிக்கும் அன்பு ஆகியவற்றைக் குறித்து ஆழமாக சிந்திக்க நம்மை அழைக்கிறது. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா "என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, என் விழிகள் உங்கள் விழிகள் அல்ல" என்று ஆண்டவரின் வார்த்தையை அறிவிக்கிறார். மனித மனம் குறுகிய பார்வையுடன் தீர்ப்பளிக்கிறது, ஆனால் இறைவனின் பார்வை அளவற்ற இரக்கம் மற்றும் மன்னிப்பும் நிறைந்தது. இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் தனது வாழ்வின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவுக்காக வாழ்வதும், அவருக்காக மரணமடைவதும் இரண்டுமே ஆசிர்வாதமே என்று அவர் கூறுகிறார். இருப்பினும் திருஅவையின் வளர்ச்சிக்காக வாழ்வதே

இறைவிருப்பம் என்பதை உணர்கிறார். எனவே கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தகுந்த வாழ்வு வாழும்படி நம்மை ஊக்குவிக்கிறார்.

நற்செய்தியில் திராட்சைத்தோட்ட தொழிலாளர்களின் உவமை வழியாக இறைவன் தனது அருளை அனைவருக்கும் சமமாக வழங்குகிறார் என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார். காலை முதல் உழைத்தவர்களுக்கும் மாலை நேரத்தில் வந்தவர்களுக்கும் ஒரே கூலியை வழங்கிய எஜமானனின் செயல், இறைவனின் அளவற்ற கருணையையும் தாராள அன்பையும் வெளிப்படுத்துகிறது. மனிதர்கள் தகுதி, காலம், உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மதிக்கப்படுகின்றனர். ஆனால் இறைவன் தனது அன்பின் அடிப்படையில் அருளை வழங்குகின்றார். எனவே, பிறருக்குக் கிடைக்கும் இறையருளைக் கண்டு பொறாமைப்படாமல் நமக்குக் கிடைத்த அருளுக்காக நன்றியுணர்வுடன்வாழ அழைக்கப்படுகிறோம். இறைவனின் அன்பு யாரையும் புறக்கணிக்கக் கூடியது அல்ல, நாம் அவரது அழைப்புக்கு மனமுவந்து பதிலளித்து, அவரது திருவுளத்தின்படி வாழும்போது, அவரது முடிவில்லா கருணையும், விண்ணரசின் பேரருளையும் பெறுவோம். எனவே, இறைவனின் தாராள அன்பை நம் வாழ்விலும் பிரதிபலித்து, அனைவரையும் சமமாக ஏற்று, அன்புடனும், நன்றியுடனும் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வழிகாட்டும் தெய்வமே இறைவா, இறைவனின் எல்லையற்ற அன்பையும், கருணையையும் உலகிற்கு எடுத்துரைத்து, அனைவரையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன் பணியாற்ற எங்கள் திருநிலைப்பணியாளர்களுக்கு அருள்தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. உடனிருக்கும் தெய்வமே இறைவா, நீதி, சமத்துவம் மற்றும் மனித மாண்பைப் போற்றும் மனதுடன் மக்களுக்கு எங்களுடைய அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்கள் தொண்டாற்றி, அமைதியும், ஒற்றுமையும் நிலவ வழி நடத்தப்பட அருள் கிடைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கடைசியானோர் முதன்மையாவர், முதன்மையானோர் கடைசியாவர் என்றுறைத்த இறைவா, ஏழைகள், நோயாளிகள், வேலைவாய்ப்பின்றி தவிப்போர், துயருறுவோர் உமது ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற்று உம்மைப்பின்பற்றி வழிநடந்திட அவர்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஒளியின் தெய்வமே இறைவா, எம் சமுதாயத்தில் பங்குத்தளத்தில் ஏழை, பணக்காரர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்னும் பாகுபாடு களைந்து, ஒருவர் மற்றவரை ஏற்று வாழும் நல்லெண்ணம் யாவரிடத்திலும் ஊற்றெடுக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித மத்தேயு
## திருத்தூதர், நற்செய்தியாளர் விழா

திருப்பலி
21.09.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவை நற்செய்தியாளர் புனித மத்தேயுவின் வணக்க நாளை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. மத்தேயு என்ற பெயர் "யாவேயின் பரிசு" என்று பொருளாகும். புனித மத்தேயு "கலிலேயாவிலுள்ள, "கப்பர்நாகும்" என்ற ஊரில் பிறந்தவர். இவரது உடல் இத்தாலியில் உள்ள சலெர்னோ கத்தீட்ரலில் பாதுக்காக்கப்படுகின்றன. கப்பர்நாகும் சுங்கச்சாவடியில் வரிவசூலிக்கும் பணியில் இருந்தபோது இயேசுவின் பார்வையில் பட்டு சீடராக அழைக்கப்பட்டவர். அவருடன் வரித்தண்டுபவரோடு சேர்ந்து "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்கவந்தேன் என்றார் (மத். 9:9-13). புனித மத்தேயு இயேசுவின் உடனிருந்து அவரது போதனைகளை கற்றுக்கொண்டவர். தூய ஆவியின் வருகைக்கு பிறகு பல்வேறு நாடுகளில் நற்செய்தியை பரப்பினார்.

எத்தியோப்பியா அல்லது பாரசீக பகுதியில் நற்செய்தியை பரப்பியபோது மறைச்சாட்சியாக செல்லப்பட்டவர். கணக்கர்கள், வங்கியாளர்கள், மற்றும் வரிவசூலிப்பவர்களின் பாதுகாவல் புனிதராக புனித மத்தேயு மதிக்கப்படுகிறார். "அல்பேயுவின் மகனாகப் பிறந்து லேவி என்றழைக்கப்பட்ட இவரின் அடையாளம் "திருவிவிலியம்" புனித மத்தேயுவின் சகோதரர் புனித யாக்கோபு என்னும் சீடர். இவர் எபிரேயம், கிரேக்கம், அரமேயு, இலத்தீன் ஆகிய மொழிகளில் புலமைப் பெற்றவர். புனித மத்தேயு வரிதண்டுபவராக இருந்து இயேசு அவரை சீடராக அழைத்தார். இன்றைய நற்செய்தியில் இவரை சுட்டிக்காட்டப்படுகிறது. நாம் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப நாம் இயேசுவோடு இணைந்து, நம் வாழ்வை சாட்சியமாக்கிக் கொள்ள இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுகிறோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வழிகாட்டும் தெய்வமே இறைவா, எம்திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் திருநிலையினர் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்தம் பணியில் மேலும் பிரகாசித்து திருஅவையின் இறையாட்சிப் பண்மடங்காக ஒளிர உம்மை மன்றாடுகிறோம்.

2. நிறைவாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாங்கள் இவ்வுலக வாழ்வின் மாயைகளை உணர்ந்தவர்களாய், உமது கட்டளைகளை கடைப்பிடித்து, உமதன்புக்கு உகந்தவர்களாக நாங்கள் வாழவும், பிறரையும் அன்பு செய்து உமக்கேற்ற பாதையில் நாளும் அவர்களை வழிநடத்தத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவிகளுக்காகவே கையளிக்கப்பட்ட எம் இறைவா, திருமறையை நாளும் போதித்து, மக்களை நல்வாழ்விலும், நம்பிக்கையிலும் வளர்த்தெடுக்கும் "நற்செய்தியின் தன்னார்வ பணியாளர்களையும் அவர்களின் பயணங்களையும் பணிகள் அனைத்தையும் ஆசீர்வதித்து எல்லா சூழ்நிலைகளிலும் இறைமதிப்பீட்டின்படி வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்கள்

திருப்பலி
22.09.2026

### முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் ஸ்பானிஸ் நாட்டு சலேசிய குடும்பத்தை சார்ந்த அருளாளர் ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு 93க்கும் அதிகமான மறைசாட்சிகளின் நினைவினை கொண்டாடுகின்றோம். ஸ்பெயின் நாட்டு போரில், கிறித்துவ துறவிகள், குருக்களை சிறையில் அடைத்து இறை பணியாற்றியதற்காக அவர்களை கொலை செய்தார்கள். அத்தகையோரில் 95 சலேசியத் துறவிகள், 39 குருக்கள், 22 திருப்பணியாளர்கள், 24 அருட்சகோதரர்கள், 2 சலேசிய கன்னியர்கள், 4 சலேசிய உடனுழைப்பாளர்கள் அடங்குவர். அனைவரும் ஏறக்குறைய ஜூலை 1936 முதல் ஏப்ரல் 1938 வரையிலான காலகட்டத்தில் கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தங்களது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார்கள். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடிகளாகவும் திகழ்ந்தார்கள். இந்த தியாகப்பலியில் பங்கெடுக்க வந்துள்ள நாம் அனைவரும், நம் ஒவ்வொருவருக்காகவும், சலேசியர்களுக்காகவும் சிறப்பான விதத்திலே செபிக்க கடமைப்பட்டுள்ளோம். தொன் போஸ்கோவைப்போல, தொன்போஸ்கோவாக வாழ்ந்த இந்த சலேசிய மறைசாட்களின் முன்மாதிரியினைப் பின்பற்றி வாழ்வதற்கு தேவையான அருட்கொடைகளை நாமும் பெற வேண்டி இத்திருப்பலியில் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் இயேசுவின் வழிநடந்து மக்களை இறைவழியில் நடத்திச் செல்லவேண்டிய அருள்வரங்களைப் பெற்று சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான்

திருப்பலி
26.09.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய திருப்பலியில் நாம் புனிதர்கள் கோஸ்மாஸ் மற்றும் தமியான் இவர்களின் திருப்பலியில் கலந்துக்கொள்ள வந்திருக்கிறோம். சகோதரர்களான இவர்கள் மருத்துவர்களாக இருந்து, நோயாளிகளுக்கு எந்தக் கூலியும் பெறாமல் அன்புடன் சிகிச்சை அளித்தனர். "பணம் பெறாத மருத்துவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். தங்களது தொழிலையே இறைப்பணியாக மாற்றி, பலருக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தனர். இறுதியில் கிறிஸ்துவின் மகிமைக்காக மறைச்சாட்சியாக உயிரை அர்ப்பணித்து விண்ணக மகிமையை அடைந்தனர். இவர்கள் கி.பி. 3ம் நூற்றாண்டில் சிரியா அல்லது அரேபியா பகுதியில் பிறந்ததாகத் தெரிகிறது. உரோமைப் பேரரசன் தியோக்கிளிட்டின் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு கடுமையான துன்புறுத்தல்கள் ஏற்பட்டன. கிறிஸ்துவை மறுதலிக்கும்படி இவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஆனாலும் இவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை. இறுதியில் இவர்கள் தலைத்துண்டிக்கப்பட்டு மறைசாட்சியாக உயிர் நீத்தனர்.

இவர்கள் வாழ்ந்த காலத்திலேயே பல குணமாக்கும் அற்புதங்கள் நிகழ்ந்தன. இவர்களால் நோயுற்ற ஒருவருக்கு கால் மாற்றும் அற்புதம் நிகழ்ந்தது. இவர்கள் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள், நோயாளிகள் ஆகியோருக்கு பாதுகாவலர். செப்டம்பர் 26ம் தேதி உரோமைத் திருஅவையின் பொதுக்காலண்டரில் இவர்களின் திருவிழா கொண்டாடப்படுகிறது. இவர்கள் வாழ்வின் படிப்பினைகள் என்னவென்றால் தன்னலமற்ற சேவை, திறமையை இறைவனின் மகிமைக்கும் மனிதரின் நலனுக்கும் பயன்படுத்துதல், ஏழைகள்மீது கருணை, எந்தச் சூழலிலும் நம்பிக்கையில் நிலைத்திருத்தல், பிறருக்காக வாழும் அன்பான வாழ்க்கையாகும். இவர்களது வாழ்வை நம் வாழ்வாக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் புனிதர்கள் கோஸ்மாஸ் மற்றும் தமியானைப்போல தன்னலமற்ற அன்போடும், நம்பிக்கை சாட்சியோடும் வாழ இறையருள் பெற ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமும் கனிவும் கொண்ட இறைவா, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள், நோயாளிகளைப் பராமரிப்போர் அனைவரும் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் தங்கள் சேவையின் வழியாக வெளிப்படுத்த அருள்பெற வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

3. உன்னைப் படைத்தவரை உன் இளமைப்பருவத்தில் மறவாதே, என்றுரைத்த தேவனே, இன்றைய காலத்தில் வாழ்ந்து வரும் இளையோர் இணையதளத்தில் மட்டும் தங்களை இணைத்துக்கொள்ளாமல் இறைவனோடும் இணைந்து கனிதரும் மக்களாக வாழ்ந்திட அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலம் 26வது ஞாயிறு

திருப்பலி
27.09.2026

### முன்னுரை

*திரு. ச. ஜான் போஸ்கோ*

I. *எசே. 18: 25-28* II. *பிலி. 2: 1-11* *மத். 21: 28-32*

அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே! இன்றைய திருவிவிலிய வாசகங்கள், மனமாற்றம், பணிவு, மற்றும் செயலால் வெளிப்படும் நம்பிக்கை ஆகிய மூன்று முக்கியமான கிறித்தவப் பண்புகளை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசேக்கியேல் ஒவ்வொருவரும் தங்கள் செயல்களுக்கேற்ப பலனைப் பெறுகிறார்கள். தீயவன் தனது தீய வழியை விட்டு மனம் மாறினால் அவன் வாழ்வான்; நீதிமான் நீதியை விட்டு விலகினால் அதன் விளைவுகளை அனுபவிப்பான். இறைவனின் நீதி மனிதனைத் தண்டிப்பதற்காக அல்ல, மனமாற்றத்தின் மூலம் வாழ்வை மாற்றுவதற்காகவே உள்ளது என்பதைத் தெளிவாகக் கூறுகிறார்.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், கிறிஸ்துவின் மனநிலையை நாமும் ஏற்றுக்கொள்ள அழைக்கிறார். கடவுளுக்குச் சமமானவராக இருந்த இயேசு, தம்மையே வெறுமையாக்கி பணிவான பணியாளராக மாறினார். சிலுவை மரணம் வரை கீழ்ப்படிந்த அவரது பணிவும் அன்பும், இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டது. உண்மையான பெருமை அதிகாரத்தில் அல்ல; பணிவிலும் கீழ்ப்படிதலிலும் தன்னலமற்ற அன்பிலும் இருக்கிறது என்பதை இயேசு பெருமான் தம் வாழ்வால் வெளிப்படுத்தியதை பவுல் நினைவுப்படுத்துகிறார்.

நற்செய்தியில் "இரு மகன்கள்" என்ற உவமையின் மூலம் இயேசு, பெருமான் வார்த்தைகளைவிட செயல்களே முக்கியம் என்பதை எடுத்துரைக்கிறார். "போகிறேன்" என்று சொல்லிவிட்டு செல்லாத மகனைவிட, முதலில் மறுத்தாலும் பின்னர் மனம் மாறிச் சென்ற மகனே தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினான். அதுபோல, வரிவசூலிப்பவர்களும் பாவிகளும் மனம் மாறி இறையாட்சியை

ஏற்றுக்கொண்டனர்; ஆனால் தங்களை நீதிமான்களாகக் கருதிய பலர் உண்மையான மனமாற்றத்திற்கு இடமளிக்கவில்லை.

இன்றைய மூன்று வாசகங்களும் மனமாற்றமில்லாத பக்தி பயனற்றது; பணிவில்லாத நம்பிக்கை முழுமையற்றது; செயல்களால் உறுதிப்படுத்தப்படாத வார்த்தைகள் வெறுமையானவை என்பதை வலியுறுத்துகின்றன. இறைவன் நம் உதடுகளின் அறிக்கையைவிட, நம் இதயத்தின் மாற்றத்தையும் வாழ்வின் சாட்சியத்தையும் விரும்புகிறார். இயேசு பெருமானின் பணிவை முன்மாதிரியாகக் கொண்டு, ஒவ்வொரு நாளும் இறைவனின் திருவுளத்தின்படி வாழ்ந்து, நம் செயல்களால் நம் விசுவாசத்தை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். ஆகவே, இத்திருப்பலியில் பங்கேற்கும் நாம், நம் வாழ்க்கையில் மனமாற்றம் அடைந்தவர்களாய் அன்னை மரியாளைப்போல "ஆம்" என்பதை நம் அன்றாட வாழ்வில் வாழ்ந்து காட்டும் சீடர்களாக நாம் உருவாக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நீர் உலகைப் படைத்து அவற்றில் உமது திருஅவையைக் கட்டியெழுப்பி, அவற்றை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்கரம் ஒப்படைத்து மன்றாடுகிறோம். உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களின் மனங்களில் இறைவார்த்தையை விதைத்து, அவற்றின் முழு பலனை அனுபவிக்கும் நல்முத்துக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் ஒளிச்சுடரே, எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியை ஏற்றவும், எங்கு பகைமை உள்ளதோ அங்கு சமாதானம் உருவாகவும், அன்பிற்காக ஏங்கித் தவிப்போருக்கு அன்பையும், சமாதானம் இல்லாதவர்களிடையே சமாதானத்தையும், ஒற்றுமையையும் உருவாக்க வேண்டுமென்று எங்கள் ஒவ்வொருவரிலும் உமது கனிவான நற்குணங்களை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைஇரக்கத்தின் ஆண்டவரே, உமது கனிவான இரக்கத்தையும், பணிவையும், தன்னலமற்ற அன்பையும், கீழ்ப்படிதலையும் எங்களிடையே நிலவவும், முழுமையான மனமாற்றம் அடைந்து, உம்மீது உண்மையான நம்பிக்கையும், செயல்களில் நேர்மையையும் நாங்கள் கடைப்பிடித்து வாழ உம் அருட்கொடைகளை தூய ஆவியாரின் வழியாக எங்களுக்குப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, இக்காலக் குழந்தைகள் வயதிற்கேற்ற அனுபவமும், இறைபக்தியும், கீழ்ப்படிதலும்,

இறைவார்த்தைக்குச் செவிமடுத்து உமது பாதையில் தங்களின் வாழ்வை இணைத்துக்கொள்ளும் நல்லுள்ளம் கொண்ட குழந்தைகளாக இவர்களை வளர்த்தெடுக்க பெற்றோர்களின் மனதை மாற்றி நல்வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# முப்பெரும் அதிதூதர்கள் திருவிழா

திருப்பலி
29.09.2026

## முன்னுரை

*அருட்சகோ. யோவான் ச.ச*

இறையேசுவில் அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே, புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகிய அதிதூதர்களின் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாட இன்று நாம் இங்கே ஒன்றுகூடியுள்ளோம். இறைவனின் திருமுன் நின்று அவரைப் போற்றிப் புகழ்ந்து, அவரது திருவுளத்தை நிறைவேற்றும் தூதர்களை இந்நாளில் சிறப்பாக நினைவுகூர்கிறோம். இன்றைய முதல் வாசகத்தில், இறைவாக்கினர் தானியேல் கண்ட காட்சியில், மானிட மகனுக்கு ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் வழங்கப்படுவதையும், எண்ணற்ற தூதர்கள் இறைவனின் திருமுன் பணிபுரிவதையும் காண்கிறோம். நற்செய்தியில் ஆண்டவர் இயேசு, "வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது இறங்குவதையும் காண்பீர்கள்" என்று நமக்கு நம்பிக்கையூட்டுகிறார்.

மிக்கேல் - தீமையையும் தீய சக்திகளையும் எதிர்த்து இறைமக்களைப் பாதுகாப்பவர்.
கபிரியேல் - இறைவனின் நற்செய்தியை அறிவிப்பவர்.
இரபேல் - இறைவனின் குணப்படுத்தும் அன்பையும் நலத்தையும் வழங்குபவர்.

இந்த அதிதூதர்கள் நமக்கு இறைவனின் உடனிருப்பையும் பாதுகாப்பையும் நினைவூட்டுகின்றனர். நாம் ஒருபோதும் தனியாக இல்லை, இறைவன் தமது தூதர்களின் வழியாக நம்மை வழிநடத்தி, பாதுகாத்து, நமது வாழ்வில் தமது அன்பை வெளிப்படுத்துகிறார்.

அதேவேளை, நாமும் பிறருடைய வாழ்க்கையில் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் எடுத்துச் செல்லும் "தூதர்களாக" மாற அழைக்கப்படுகிறோம். துன்பப்படுவோருக்கு ஆறுதலாகவும், தடுமாறுவோருக்கு நல்வழிகாட்டியாகவும், விழுந்தவர்களுக்கு துணையாகவும், நோயுற்றோருக்கு நம்பிக்கையாகவும், தனிமையில் இருப்போருக்கு உடனிருப்பாகவும் நாம் இருக்க வேண்டும்.

எனவே, இன்றைய திருப்பலியில் இறைவனின் தூதர்களின் பாதுகாப்பையும் வழிகாட்டுதலையும் வேண்டுவோம். நமது குடும்பங்கள்,

சமூகங்கள் மற்றும் உலகில் அமைதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம், நன்மை, பாதுகாப்பு நிலவிட மன்றாடுவோம். குறிப்பாக, நாமும் இறைவனின் அன்பை பிறரிடம் எடுத்துச் செல்லும் கருவிகளாக மாற அருள்வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தூண்களாக நின்று செயல்படும் திருஅவையின் தலைவரான எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது தூதர்களின் வழிகாட்டுதலின்படியும், உம் நற்செய்தியின் வார்த்தைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும்போது அவற்றில் ஏற்படும் பலவிதமான பிரச்சனைகளையும் நீர் முன்னின்று தகர்த்தெறிந்து இவர்களை பாதுகாத்து வழிநடத்த தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் தாங்கள் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை மனதில் கொண்டு, மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான பணிகளை நேர்மையுடனும், சிறப்புடனும், அனைவருக்குமான பலன்களை அளித்து மக்களின் குறைகளை நிறைவேற்றி வாழ்வில் மகிழ்வினைக் கண்டுகளிக்கும் நல்லுள்ளத்தை இவர்களுக்கு அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பங்களை ஒப்புக்கொடுக்கின்றோம். குடும்பத்தில் ஒற்றுமை, சமாதானம், அமைதி, இறைபக்தி நிலவவும், திருத்தூதர்கள் எவ்வாறு தங்களின் பணியினை சிறப்பாக செய்தார்களோ, அவ்வாறே பெற்றோர்களும், தங்களின் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் நல்ல முன்மாதிரியான குடும்ப பொறுப்பேற்று இறைவனின் பாதையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு செயல்பட தேவையான நல்ல ஞானத்தையும், மனத்தெளிவையும் அறிவையும் அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித ஜெரோம்

திருப்பலி
30.09.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

புனித ஜெரோம் "எரோணிமுஸ்" என்று அழைக்கப்படுகிறார். இவர் விவிலியத்தை தூய ஆவியின் தூண்டுதலோடும் வானதூதரின் வழிகாட்டுதலுடனும் மொழிபெயர்த்ததால் கத்தோலிக்க திருஅவை இவரை புனித நிலைக்கு உயர்த்தியது. புனித ஜெரோம் 342ம் ஆண்டில் யூகோஸ்லாவியாவில் டால்மேஷியாவில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் யுசிபஸ். இவர் சிறுவயதில் மிகவும் சுறுசுறுப்பாகவும், துடிப்புமிக்கவராகவும் இருந்தார். இவர் தனது 26வது வயதுவரை கிறிஸ்துவத்தையும் அதன்

கோட்பாடுகளையும் கடைப்பிடிக்கவில்லை. பலரைப்போல உலக நாட்டத்தையே விரும்பினார். முதலில் ரோமையில் படிப்பைத் தொடங்கிய இவர் இன்னும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் ஜெர்மனி, எகிப்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் சென்று படித்து தனது அறிவை பெருக்கிக் கொண்டார். பல நாடுகளின் பழக்க வழக்கங்களையும் குறிப்பாக இயேசு வாழ்ந்த பல பகுதிகளையும் ஆராய்ந்து இறுதியாக பாலஸ்தீன பாலைநிலைத்தில் 5 ஆண்டுகள் தனிமையில் வாழ்ந்தார். தனது 39வது வயதில் குருப்பட்டம் பெற்றார். பல இடங்களில் பணிபுரிந்தார். கி.பி. 382ம் ஆண்டு உரோமை நாட்டுக்குச் சென்று திருத்தந்தை தாமசுஸ் அவர்களோடு தங்கியிருந்தார். திருத்தந்தை அவருக்கு விவிலியத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்க கூறினார்.

எபிரேயம் மற்றும் இயேசுவின் தாய்மொழியான அரமேயத்தையும் நேரடியாக இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். விவிலிய மொழிப்பெயர்ப்பின்போது வானதூதர்கள் உறுதுணையாக இருந்தார்கள் என பழங்கால ஓவியங்கள் கூறுகிறது. திருத்தந்தையின் மறைவுக்குப்பின் தனது நாட்டிற்கு வந்து தொடர்ந்து மொழிப்பெயர்ப்பில் ஈடுபட்டு முடித்தார். இலத்தீன் மொழியில் மொழிப்பெயர்ப்பதற்கு வுல்கத்தா என்று பெயர். அதாவது விவிலியத்தை சாதாரணமாக பயன்படுத்துவது என்பது பொருள். இந்த மொழிபெயர்ப்பை கத்தோலிக்க திருஅவை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது.

இவரது தாரக மந்திரம் விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்பதாகும். இவர் தன் பாவங்களுக்காகவும், குறைபாடுகளுக்காகவும் வருந்தி ஒரு கல்லால் தனது மார்பில் அடிக்கடி அடித்துக்கொள்வார் என்று ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. தனது மரணத்தை அடிக்கடி நினைவுப்படுத்திக்கொள்ள தனது மேசையின்மீது ஒரு மண்டையோட்டை காகித சுமைப்போல பயன்படுத்தியுள்ளார். சிங்கத்தின் காலில் உள்ள முள்ளை எடுத்துவிட்டதால் அச்சிங்கம் வளர்ப்பு பிராணிப்போல இருந்தது.

புனித ஜெரோம் கி.பி. 420 செப்டம்பர் 30ம் நாள் பெத்லகேமில் இறந்தார். இவரது திருப்பண்டம் உரோமில் உள்ள மரியன்னை பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவர் விவிலிய அறிஞர்கள், ஆவணக் காப்பாளர், நூலக அறிஞர் மாணவர்களின் பாதுகாவலராக கருதப்படுகிறார். நாமும் இப்புனிதரைப்போல சாட்சியாக வாழ இத்திருப்பலியில் வரம் கேட்டு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் நீர் ஆசீர்வதித்தருளும். இவர்கள் உமது நற்செய்தியின் வழியில் தாங்கள்

முன்மாதிரியாக நடந்து, இவ்வழியில் மக்களை வழிநடத்தவும், இவர்களுக்கு தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா, உம்மக்கள் அனைவரும் திருஅவையின் விழுமியங்களை கடைப்பிடித்து, திருவழிபாட்டில் ஈடுபட்டு, தங்களது குற்றங்குறைகளை ஏற்று, பிறரையும் மன்னிக்கும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழவும், உமது பாதையைவிட்டு விலாகாமல், உம்மிலே ஒன்றித்து வாழும் நல் மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அறிவின் அடித்தளமே, நீரின்றி நாங்கள் ஒன்றுமில்லை, நீர் படைத்து, எங்களின் தேவைகளை நிறைவேற்றி, நாளும் உமது பாதச்சுவடுகளை பின்பற்றி வாழ அளவில்லா கருணையும், அன்பையும், மகிழ்வினையும் அளித்தீரே, அவற்றை நாங்கள் தவறானவற்றிற்கு பயன்படுத்தியதை மன்னித்து உம் அன்பு மக்களாக நாங்கள் வாழ வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# அன்னை தெரேசா

## புனிதையாகும் தேவதை

*திருமதி ரோஸ்லின் மேரி*

ஆண்டவர் இயேசுவின் இவ்வுயரிய வார்த்தைகளை வாழ்வாக்கி வாழ்ந்தவர் அருளாளராகிய அன்னை தெரேசா. இவர் மேற்கில் உதித்த சூரியன், ஆயிரம் ஆயிரம் ஏழைகளின் பசிபோக்கி, உடையும் உறைவிடமும் தந்து தங்கள் மரண வேளையில் தம் உயிரை இறைவன் கையில் ஒப்படைக்க வழி செய்தவர். உதவி செய்வது, இவருக்கு ஒரு வேலையோ, சிறிது சேவையோ அல்ல, அதுவே இவரது வாழ்க்கைப் பாணி. இவரது பணிக்கான அருளின் ஊற்று, இறைவனிடமிருந்து வந்தது என்று உறுதியாக அறிந்திருந்தது இவரது தனிச்சிறப்பு. இதனால்தானே அவர் "நான் வெறும் எழுதுகோல், எழுதுபவர் இறைவன்" என்று கூறுவார். அவரும் தாழ்ச்சியிலும் எளிமையிலும் சுடர்விட்டு வாழ்ந்து அனைவருக்கும் அன்னையாக உதிரத்தில் கருத்தரிக்கா அன்னையாக உயர்ந்தவர்.

இந்தக் கருணை தேவதையை ஈன்றெடுத்தது யூகோஸ்லேவியா நாட்டின் ஸ்காப்னே நகர். நிக்கோலாஸ் பொஜாக்சியு, திரனா பார்னாயி தம்பதியின்

மூன்றாம் கனி. 1910ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ம் நாளில் பிறந்த இவருக்கு மறுநாளே திருமுழுக்களித்து ஆக்னஸ் கொன்சாகா பொஜாக்சியு என்று பெயரிட்டனர். செல்வந்தரான நிக்கோலா அரசியல் ஈடுபாடு கொண்டவர். அதனாலேயே வஞ்சகர்கள் இவரை விருந்தில் மருந்து வைத்து கொன்றனர். அப்போது ஆக்னசுக்கு 9 வயது. தந்தையை இழந்த நிலையில் அந்த அரும்பு வாடிவிடாமல் காத்து வளர்த்தது அவரது தாய் திரனாதான். துன்பத்தையும், வறுமையையும் இன்முகத்துடனும், உற்சாகத்துடனும் வரவேற்கும் சிறப்பு பாடத்தை தாயிடமிருந்தே கற்றார்.

தொழில் பங்குதாரர்கள் அவர்களின் பணம், சொத்துக்களை அபகரித்ததால் அவர்களுக்கு மிஞ்சியிருந்தது வீடு மட்டுமே. இருந்த வசதிகளை இழந்தாலும், வறுமை தன் குடும்ப வாழ்வை வளைத்துவிடாமல் இருக்க, தாய் திரனா கலைத் திறமையில் வளர்ந்த கைவேலைப்பாடுகள், கம்பளி விரிப்புகள், இவற்றை உருவாக்கி வாழ்வை நடத்தினார். அவர்கள் வாழ்ந்த திரு இருதய பங்கு கோயிலுக்கு 1925ல் இயேசு சபை குரு ஜாம்ரென் கோவிக் வந்தார். ஆக்னஸ் புத்தகம் படிக்கும் ஆர்வத்தினால் அவரிடமிருந்து நூல்களை வாங்கி படித்தவர். வங்காளத்தைப் பற்றி அறிந்து கொண்டதோடு, கல்கத்தாவில் பணியாற்றும் குருக்கள் தங்கள் பணிகள் பற்றி எழுதிய கடிதங்களையும் படித்தார். தாமும் இந்தியா சென்று பணியாற்ற வேண்டும் என்ற உந்துதல் பெற்றார்.

தனது 18வது வயதில் துறவு வாழ்விற்குச் சென்றிட அன்னையின் அனுமதியுடன் அயர்லாந்து சென்று ஆங்கிலம் பயின்று ஆன்மிகப் பணிக்காற்றை சுவாசித்தார். புனித குழந்தை தெரேசாவின் பாதையைத் தெரிந்தவராய், தெரேசா எனும் அவர் பெயரையே தனக்கு சூட்டிக் கொண்டார். இந்திய மண்ணாம் கல்கத்தாவில் 6.11.1929ல் கால் பதித்தார். டார்ஜிலிங்கில் இறைப்பயிற்சியின்போது ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் நற்பணி செய்யும் பக்குவம் அடைந்தார்.

மருத்துவமனையில் செவிலியப் பணி அதன் பின் கல்கத்தாவில் புனித மேரிஸ் கல்லூரியில் ஆசிரியப் பணி. 1937ஆண்டு மே மாதம் அவரின் ஆசை கனவு நிறைவேறியது. கன்னியர் பட்டம் பெற்றார் கற்பித்தலில் மூழ்கியிருந்தாலும், மோத்தீஜின் பகுதி சேரிகள் அவரின் பார்வையை ஈர்த்தது. கடை நிலையோருக்காய் ஒடுக்கப்பட்டோருக்காய் துயரப்படுவோருக்காய் தன்னை அர்ப்பணிக்க லோரேடோ இல்லத் தலைமை கன்னியரிடம் தனித்துப்போய் தொண்டாற்றிட அனுமதி வேண்டினார். அவரும் ஆன்ம குரு தந்தை செலஸ்ட் மூலம் கல்கத்தாவின் பேராயர் பெரியோரிடமிருந்து அனுமதி பெற்றுத் தந்தார். திருஅவையும் அனுமதி அளித்தது.

துயரம் மிகுந்திருந்தும் மடத்தைவிட்டு 1948ம் ஆண்டு ஆகஸ்ட் 16ல் ஒரு சிலுவை ஒரு செபமாலை மூன்று சேலைகளை மட்டுமே உடைமையாகக் கொண்டு பூமி பந்தையே தனக்குப் பின்னால் சுழன்றிட செய்யப் புறப்பட்டார். பணிபுரிய சேரி சென்ற இவரைச் சூழ்ந்து கொண்ட பிள்ளைகள் பள்ளிக்குச்

செல்லாதது அவர்களின் வசதியின்மையே காரணம் என்றறிந்து என்னிடம் அனுப்பி வையுங்கள் நானே கற்றுத் தருகிறேன் என்று சொல்லி முதல் பள்ளியை ஆரம்பித்தார். ஐந்து பிள்ளைகளில் ஆரம்பித்தது நூறு பிள்ளைகள் எட்டியபோது உதவிக்கு அவரின் மாணவி சுபாஷினி தாஸ் வந்தார். 1950ம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி ஆரம்பமானது அன்பின் பணியாளர் சபை (MISSIONARIES OF CHARITY).

என் இதயத்திலேயே மிக அழகானப் பணி இந்த இறப்போர் இல்லம்தான். காரணம், இறக்கும் மனிதரிடத்தில் இறைவனைப் பார்க்கிறேன் என்று ஆதரவற்ற நிலையில் ஆறுதல் தேடும் முதியோருக்கு தாய் மடியாக "நிர்மல் விடுதியை" (இறப்போர் இல்லம்) ஆரம்பித்தார். "உங்கள் அனுபவத்தால் தொழுநோயாளிகளை தொடுங்கள்" என்று தொழுநோயாளர் இல்லத்திற்கு வித்திட்டார். "நிர்மல் சிசுபவன்" என்ற மையத்தை வறுமையின் காரணமாய் குப்பையில் வீசப்பட்ட குழந்தைகள் மனநோயாலும் உடல் நோயாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அநாதையாக்கப்பட்ட 8-10 வயது குழந்தைகளுக்காய் ஆரம்பித்தார். மேலும் மனவளர்ச்சிக் குன்றிய ஊனமுற்ற பிள்ளைகளுக்கென "நிர்மல் கென்னடி மையம்" ஒன்றினையும், வாழ்வில் தவறிப்போன இளம் பெண்கள் பராமரிப்புக்கென என்று பணிவாழ்வின் இமயத்தைத் தொட்டார்.

தனது பணியை விரிவுப்படுத்தும் வகையில் எட்டு விதமான நிலைகளில் பணியாளர்களை உருவாக்கினார். அமைதிக்கான விருது எ ன நோபல் பரிசு, பத்மஸ்ரீ, பாரத் ரத்னா, மகாசேசே என பல விருதுகள் அவருக்குப் புகழாரம் சூட்டின. "எல்லா மதங்களையும் நேசிக்கிறேன், நான் கிறிஸ்துவில் வாழ்கிறேன்," என்று மதங்களைப் பற்றி கூறின அன்னைக்கு மதங்களைக் கடந்து, கோடான கோடி மக்களின் கண்ணீர் மழையில் மூழ்கி இந்திய மண்ணின் இருபெரும் தலைவர்களான காந்தி-நேரு ஆகியோரின் உடல்களைச் சுமந்த பீரங்கி வண்டியில் இராணுவ அணிவகுப்பு அரசு மரியாதையுடன் பீடச் சிறுவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி வர அதோ அந்த "சேரி வாழ் புனிதையின்" இறுதி ஊர்வலம்.

ஆம் சரிந்துபோன சமூகத்திற்கு சாமரம் வீசிய பூமரம் சாய்ந்து விட்டது. வானுலக அழைப்பை ஏற்று "கருணையின் தேவதை" புறப்பட்டு விட்டாள். 1997ம் ஆண்டு செப்டம்பர் 5ம் நாள் ஆண்டவர் வழங்கிய அட்சய பாத்திரம் மூடிக்கொண்டது. பறந்துவிட்டார் அன்னை விண்ணை நோக்கி. 2003ம் ஆண்டு அக்டோபர் 13ல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னையை "வணக்கத்துக்குரியவர்" நிலைக்கு உயர்த்தினார். வாழும்போதே புனிதையான அன்னைக்கு மீண்டும் வரும் செப்டம்பர் 4ஆம் நாள் புனிதர் பட்டம். அந்தப் புனிதை தன் வாழ்வில் அனுபவித்த திவ்விய நற்கருணையில் இறைபிரசன்னத்தை நாமும் அனுபவிப்போம், அதே நற்கருணை நாதரை எல்லா மனிதரிலும், துன்புறும் ஏழை மனிதரிலும் காண்போம், ஆண்டவர் பணியென அன்பினைப் பகிர்ந்து கொள்வோம், புனிதராவோம்.



# புனித மத்தேயு
## வாழ்வு தரும் பாடம்

*திரு. P. விக்டர்*

ஆயக்காரன், பாவி, வஞ்சகன் என்று மக்களால் அழைக்கப்பட்டவர்தான் மத்தேயு. முரண்பாடான எண்ணங்களைக் கொண்டவர். யூதன், யூதனாம் இயேசுவைப்பற்றி யூதர்களுக்காகப் புதிய ஏற்பாட்டின் முதல் நூலை எழுதியவர். 12 திருத்தூதர்களில் ஒருவர், இவர்தான் மத்தேயு என்றழைக்கப்பட்ட "லேவி". மத்தேயு என்றால் "இறைவனின் கொடை" என்று பொருள். இவர் கலிலேயா நாட்டைச் சேர்ந்த கப்பர்நாகூமுக்கு அருகில் பிறந்தார். தந்தை அல்பேயு, தாய் மரியாள், கன்னி மரியாளின் உறவினன். அவர் காலத்தில் பாலஸ்தீனம் உரோமை ஆட்சியின்கீழ் இருந்ததால் ஒவ்வொரு குடிமகனும் சீசருக்கு வரிசெலுத்தவேண்டும். வரி வசூலிக்க ஆயக்காரர்களும், வரித்தண்டுபவரும் நியமிக்கப்படுவார்கள். யூதரான மத்தேயுவும், யூதநெறியைத் தவறியவராய் உரோமையருக்கு அடிமையாகி, சுங்கவரி வசூலிக்கும் ஆயக்காரரானார். வசூலித்த வரிப்பணத்தில் அரசுக்குச் சேரவேண்டியதைக் குறையின்றி கொடுத்து, அதிகாரிகளின் விசுவாசியாகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தார். அதனால் தன் இனமக்களாம் யூதர்களிடமிருந்தோ மூன்று அல்லது நான்கு மடங்காக வரிவசூலித்து தவறான வழியில் செல்வத்தைச் சேர்த்தார். பணத்தால் பண்பை இழந்தார். இதன் காரணமாகவே யூத மக்கள் இவரை

வெறுத்து பாவி என்றழைத்தனர். இறைவழிபாட்டிலிருந்து விலக்கி வைத்தனர். ஆயக்காரன் உவமையில் ஆலய வழிபாட்டில் "அவன் தூரத்திலேயே நின்றான்" (லூக் 18:13) என்று விலக்கி வைத்ததை உறுதிப்படுத்துகிறது.

ஒருநாள் மத்தேயு கப்பர்நாகூம் சுங்கச் சாவடியில் அமர்ந்திருக்கக் கண்ட இயேசு "என்னைப் பின்செல்" என்றார். சமுதாயம் தன்னை இகழ்ச்சியாக எண்ணும்போது எல்லோராலும் மதிக்கத்தக்க இயேசு தன்னை அழைத்ததும் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப்பின் தொடர்ந்தார். இயேசு பணம் படைத்தவரல்லர் குணம் படைத்தவர் என்பதை தெரிந்தே இவ்வுலகச் செல்வங்களிலிருந்து தன்னை விடுவித்தவராய் இயேசுவைப் பின்தொடர்ந்தார் மத்தேயு. தனது மகிழ்ச்சியையும், விருந்தோம்பும் பண்பு மற்றும் நன்றியினையும் இயேசுவுக்குக் காட்டும் விதமாக பெரிய விருந்தொன்றினை அளித்தார். இயேசு பந்தியமர்ந்திருக்கையில் அவரின் சீடர்கள், வரித்தண்டுபவர், பாவிகள் என பலர் அவருடன் அமர்ந்திருந்தனர். மத்தேயு தான் பெற்ற அழைப்பைப்பற்றி தன் கடந்தகால பாவ வாழ்வைப் பற்றியும் அச்சமோ, வெட்கமோ கொள்ளாமல் வந்திருந்த அனைவரும் அறியுமாறு வெளியிட்டார். இயேசு பாவிகளோடும், வரித்தண்டுவோரோடும் உணவருந்துவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத மறைநூல் அறிஞர்களுக்கு, தமது பணியின் இலக்கை இயேசு மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். "நோயற்றவர்களுக்கல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களைவிட பாவிகளையே அழைக்க வந்தேன்" என்று இயேசு மொழிகின்றார் (மாற்கு 2:13-17).

இங்கேதான் மத்தேயுவின் மாறுபட்ட எண்ணங்களைக் காண முடிகிறது. இயேசுவின் அழைப்பிற்கு முன்னால் தான் செய்த வரி தண்டும் பணியில் அரசுக்கு விசுவாசமுள்ளவராக, உண்மையுள்ளவராக இருந்தார். வசூலித்த வரியில் அரசுக்குக் கொடுக்க வேண்டியதை முறையாய்க் கொடுத்தார். அதேநேரத்தில் தனது இனத்தவராம் யூதர்களிடமிருந்து மூன்று முதல் நான்கு மடங்கு அதிகமாக வசூலித்தவராய்த் தனது பண ஆசையைத் தீர்த்துக்கொண்டார். பாவி எனப்பட்டவர் இயேசு அழைத்தவுடன் அனைத்தையும் விட்டுவிட்டு பின் தொடர்ந்ததோடு மனந்திருந்துகிறார். இந்த மன மாற்றமே பிற்காலத்தில் யூதர்கள், புறவினத்தார் பலரின் மனமாறுதலுக்குக் காரணமாகிறது.

ஆம், என்றைக்குச் சுயநலமாய், பணத்திற்கும், பொருளுக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு ஏமாற்றி பதுக்குகிறோமோ அன்றைக்கே கொள்கைகளையும், இலட்சியங்களையும் பறக்கவிட்டுவிட்டு அநீதிக்கும், பொய்மைக்கும், போலிக்கும் விலைபோகின்றோம். இந்த கீழ்நிலையிலிருந்து புனிதத் தன்மைக்கு மாறுவோம், மனந்திருந்துவோம். நம் பாவங்களுக்காக மனம் வருந்துவோம். அதில் நிலைத்திருப்போம். எப்படி அவர் தன் பழைய தொழிலுக்குத் திரும்பாதிருந்தாரோ அதேபோல் நம் பாவ வாழ்விற்குத் திரும்பாதிருப்போம். இயேசு சொன்னதைப்போல் கலப்பையில் கைவைத்தவன், திரும்பிப் பார்க்கக்கூடாது.

இவருடைய நற்செய்தியில் இயேசுதான் உண்மையான மெசியா என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு மட்டும்தான் என்ற குறுகிய பார்வையிலிருந்து அவர் அனைவருக்கும் உரியவர் என்ற விசாலமான பார்வைக்கு யூதர்களைக் கொணர்ந்தார். "என்னுடைய மக்களே என்னை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று மனந்திறந்து தைரியமாக எடுத்துச் சொல்கிறார். இப்படி இயேசு சொன்னதை தைரியமாக எடுத்துச்சொன்னதோடு, சொல்ல வேண்டியதை யாருக்குச் சொல்ல வேண்டுமோ அவர்களுக்குச் சரியாகச் சொன்னார்.

மோசே கொடுத்த திருச்சட்டம் எவ்வளவு முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். "திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ, ஒரு புள்ளியோ ஒழியாது" (மத் 5:18) என்று இயேசு கூறியதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்கிறார். "பேறுபேற்றோர்" (மத் 5:3-10) என்று மலைப்பொழிவில் இயேசு சொன்னதை இவர் மட்டுமே சொல்கிறார்.

விண்ணரசு கடுகு விதைக்கும் புளித்த மாவுக்கும் ஒப்பானது என்று நமக்கு அறிவுறுத்துகிறார். விண்ணரசு உருவாக்கம் பற்றியும், "இந்தப் பாறையின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்" (மத் 16:18) என்று கூறி திருச்சபையைப் பேதுருவிடம் ஒப்புவித்தல் பற்றியும் "உலகம் முடியும் மட்டும் எந்நாளும் உங்களோடு இருப்பேன்" என்று வாக்குறுதி அருளியதைப் பற்றியும் பறைசாற்றியவர் இவர் மட்டுமே.

மத்தேயு முதலில் யூதேயா, பின் எத்தியோப்பியா தொடர்ந்து பெர்சியா அதன்பின் பார்த்தியா மற்றும் எகிப்திலும் நற்செய்திப்பணியாற்றியதாகக் கருதப்படுகிறது. எகிப்தில் இருந்தபோது இறந்துபோன அரசனின் மகனுக்கு இயேசுவின் பெயரால் உயிரளித்தார். அந்நாட்டு இளவரசி இபிஜினா தொழுநோயால் துன்புற்றப்போது அவளைக் குணப்படுத்தினார். இவர் யூப்ரெட்டில் நதியின் அருகில் "மரபு" என்னும் இடத்தில் வேதத்துக்காக கல்லால் எறிந்து கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. இவரின் திருப்பண்டம் இத்தாலியில் சாலேர்னோ என்ற பேராலயத்தில் (Cathedral) வைக்கப்பட்டுள்ளது.

மத்தேயு நமக்குச் சொல்வது, "பாவத்திலிருந்து வெளிவந்திடுங்கள். அழைத்த இறைவனுக்கு பிரமாணிக்கமாக இருங்கள். எடுத்தச் செயலில் பிரமாணிக்கமாகவும், உறுதியாகவும் இருங்கள், விசுவாசமிக்கவராய் இருங்கள், அந்த விசுவாசத்தை வாழ்வதோடு அடுத்தவருக்கு அறிவியுங்கள், முகதாட்சண்யம் பாராமல், உண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள், பல மனித உள்ளங்களின் தவறுகளைத் திருத்துங்கள், திருந்தியும் வாழுங்கள், அவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள். தவறு செய்வது மனித இயல்பு, ஆனால் தவற்றைத் திருத்தி வாழும் புனிதப் பண்பினைக் கொள்ளுங்கள். அந்தத் தவற்றினையே மன்னித்து இறையன்புக்கு உயருங்கள் வாழ்வில் மகிழ்ச்சியாய் இருப்பீர்கள். இறைவனில் நிலைத்திருப்பீர்கள்.



# அருளாளர் ஜோசப் கலசான்ஸ்
## மற்றும் அவரது குழுவினர்

*திரு. ஜான் அலெக்ஸ்*

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிச பிரிவினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறி கொண்ட போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்களுக்குப் பல தாக்குதல்களைக் கொடுத்தனர். இதில் புனிதர்களின் திருப்பண்டங்கள் சில அழிக்கப்பட்டன. திருஅவையின் பல்வேறு அடையாளங்கள் அழித்து இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர்.

நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களைச் சேகரித்தார். மார்ச் 2000ல் உரோமை கோலோசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறைமாவட்டங்களும் கலந்து கொண்டன. சுமார் 10000க்கும் மேலான

ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உளுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும், சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொல்லொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை பார்க்கும்போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் ததும்பத்தான் செய்கிறது.

## வாலென்சியாவின் குழுவினர்

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளைக் கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருந்தார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களையும் துப்பாக்கி முனையில் ஒன்றாக நிற்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் “ஏன் அவர்களைச் சுடவில்லை. எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு”? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக வைக்கப்பட்டனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும் விடுதலைச் செய்தார்கள். மறைசாட்சியாக கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

## குழுத் தலைமையாக்கப்பட்ட பணி. ஜோசப் கலசான்ஸ்

மறைசாட்சிகளான இவர்களது குழுவிற்குத் தலைமையாக்கப்பட்டவர் பணி. கலசான்ஸ், ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களைக் கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பணி. ஜோசப் கலசான்ஸ். பின்னாளில் யாருமின்றி அனாதையாகச் சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின் பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே அவரின் கல்விச் செலவுகள், கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தன. இங்கு தான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய் பதிந்த ஒன்றானது. செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளாரிடமிருந்து தன் முதல் துறவற ஆடையைப் பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்குப் பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவர். தன் சலேசிய பணியோடு சேர்ந்து திருப்பணியையும்

20 ஆண்டுகள் திறம்பட செய்ததால் 1916ல் க்யூபா நாட்டிற்கு சிறப்புப் பணிக்காக அவர் அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமைத் தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன்பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பப் பெறப்பட்டு, தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றினார்.

கனிவன்புடன் பழகும் குணமுடைய அருட்பணி. ஜோசப் கலசான்ஸ் அனைவராலும் போற்றப்பட்டு அன்பு செய்யப்பட்டவர். அவரின் நிர்வாகத்திறமை மற்றும் உடனிருத்தலின் தன்மை அனைத்தும் அவருக்கென ஒரு பாணியை மக்களிடத்தில் உருவாக்கியன. தந்தைக்குரிய பாசத்தினால் அவரை எல்லோரும் "இன்னொரு தொன் போஸ்கோ"வாகவே கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூலை 21, 1936ல் வெலென்சியா சலேசிய மாநிலத்தில், அங்குள்ள சலேசியர்களுக்கு தியானம் வழங்கிக்கொண்டிருந்தார் பணி. ஜோசப். அப்போது அவர் அதன் மாநிலத் தலைமைத் தந்தையும் ஆவார். அங்கு வந்த கலகக்காரர்கள் அவரையும் அங்கிருந்த சலேசியர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு சிறையில் அடைத்தனர். ஒரு வாரத்திற்குப் பின் அனைவரையும் விடுவித்தார்கள்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி. ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்குக் கொண்டு சென்றார்கள். பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியைப் பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன், இவனைக் கொல்ல வேண்டும்" என்றான். இதற்கு முன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் அருளாளர் ஜோசப் கலசான்ஸ் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்கு கொண்டு சென்றார்கள். வழியிலேயே ஒருவன் பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே" என்றபடியே பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார். கிறிஸ்துவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தனது இன்னுயிரைக் கிறிஸ்துவுக்காக ஈந்தார்.

சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருளாளர் ஜோசப் கலசான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடும் நினைவு கூறுகிறார்கள். திருஅவை பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தி மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.



# திருஅவைச் செய்திகள்

*அருட்சகோ. யோவான் ச.ச*

## புலம்பெயர் மற்றும் அகதிக் குழந்தைகளைப் பாதுகாக்க திருத்தந்தை அழைப்பு

புலம்பெயர் மற்றும் அகதிகளின் 112ஆம் உலக நாளையொட்டி, புலம்பெயர்வு மற்றும் கட்டாய இடப்பெயர்வால் பாதிக்கப்படும் குழந்தைகளின் மாண்பையும் உரிமைகளையும் பாதுகாக்க திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்தார். ஒவ்வொரு குழந்தையின் துயரத்தையும் தனிப்பட்ட கதையாகக் கருதி அக்கறையுடன் அணுக வேண்டும் எனக் கூறிய அவர், கல்வி, குடும்ப ஒன்றிப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கான வாய்ப்புகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். குழந்தைகளின் பாதுகாப்பில் அரசுகள், நிறுவனங்கள் மற்றும் சமய சமூகங்கள் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கொலம்பிய மக்களுடன் திருஅவை ஒருமைப்பாடு

கொலம்பியாவில் ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் இறைவேண்டலிலும் ஒருமைப்பாட்டிலும்

ஒன்றிணைய திருஅவை அழைப்பு விடுத்துள்ளது. உயிரிழப்புகள், காயங்கள் மற்றும் பெரும் சேதங்களை ஏற்படுத்திய இப்பேரிடரால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டோரின் தேவைகளை மதிப்பிட்டு, அவசர உதவிகளை வழங்க மறைமாவட்டங்களுடன் இணைந்து திருஅவை செயல்பட்டு வருகிறது. துயரத்தின் மத்தியில் நம்பிக்கையை நிலைநிறுத்தவும் தொடர்ந்து துணைநிற்கவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகளின் வளர்ச்சியில் எண்ணிமக் கருவிகள் குறித்து யுனிசெப் எச்சரிக்கை

ஆரம்பக்காலக் குழந்தைப் பருவத்தில் எண்ணிமக் கருவிகளை அதிகமாகவோ முறையற்ற வகையிலா பயன்படுத்துவது, குழந்தைகளின் அறிவாற்றல் மற்றும் உணர்வுப்பூர்வ வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) இத்தாலி எச்சரித்துள்ளது. நேருக்கு நேர் உரையாடல், விளையாட்டு மற்றும் உணர்வுப்பூர்வமான தொடர்புகள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளது. குழந்தைகளுக்கான பாதுகாப்பான எண்ணிமச் சூழலை உருவாக்க வலுவான தனியுரிமை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளது.

## துறவறத்தார் கிறிஸ்துவின் அன்புக்குச் சாட்சிகளாகத் திகழ வேண்டும்: திருத்தந்தை

அமெரிக்காவின் பெண் துறவியரின் தலைமைத்துவ மாநாட்டின் 70ஆம் ஆண்டு நிறைவையொட்டி, துறவறத்தார் கிறிஸ்துவின் அன்புக்கும் இரக்கத்திற்கும் சாட்சிகளாகத் திகழ வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்தார். பல்வேறு அருள்கொடைகளை ஒன்றிணைத்து, திருஅவையின் பணிக்கும் மறைப்பணிக்கும் தங்களை அர்ப்பணிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். நற்செய்தி அறிவித்தல், கல்வி, ஏழைகளுக்கான சேவை மற்றும் இளைஞர்களின் அழைத்தல்களை ஊக்குவிப்பதில் துறவறத்தாரின் பங்களிப்பை அவர் பாராட்டினார்.

## உரோமில் புனித மோனிக்காவின் அருளீக்கங்கள்

வரலாற்றுப் பயணம் புனித அகுஸ்தினாரின் தாயாரான புனித மோனிக்கா, கி.பி. 387 இல் இத்தாலியின் உரோம் நகரின் ஒரு கடலோரப் பகுதியான ஆஸ்தியா திபெரினாவில் காலமானார். 1760 ஆகஸ்ட் 1ஆம் நாள் நடைபெற்ற அதிகாரப்பூர்வ ஆய்வில், அவரது அருளீக்கங்கள் உறுதிசெய்யப்பட்டன. இன்று, புனித மோனிக்காவின் அருளீக்கங்கள் உரோமில் உள்ள புனித அகுஸ்தினார் பெருங்கோவிலில் போற்றி வணங்கப்படுகின்றன. தாய்மை, செபம் மற்றும் மனவுறுதியின் முன்மாதிரியாகவும், அகுஸ்தீனிய சபையின் "புனிதத் தாயாகவும்" அவர் போற்றப்படுகிறார் இவரது செபங்களும் கண்ணீருமே புனித அகுஸ்தினாரின் மனமாற்றத்தில் மிக முக்கியப் பங்காற்றின.



# மனித மாண்பைக் காப்போம்

*திரு. அந்தோணி தேவராஜ்*

மனித மாண்பைக் காப்போம் (செயற்கை நுண்ணறிவு யுகத்தில் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தை லியோ அறைகூவல்) நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் செயற்கை நுண்ணறிவின் (AI) ஆதிக்கமும் உலகை அதிவேகமாக மாற்றி வரும் வேளையில், திருத்தந்தை பதினான்காம் லியோ தனது முதல் வரலாற்றுச் சிறப்புமிக்க திருமடலான 'Magnifica Humanitas' (மகத்தான மனிதநேயம்) வழியே உலகிற்கு ஒரு மிக முக்கியமான வழிகாட்டுதலை வழங்கியுள்ளார். மே 2026ல் வெளியான இத்திருமடல், தொழில்நுட்ப யுகத்தில் மனித நேயத்தையும் ஆன்மீக விழுமியங்களையும் எவ்வாறு காப்பது என்பதைப் பேசும் மிக முக்கியமான ஆவணமாகும்.

இத்திருமடலில் மனித மாண்பும் தொழில்நுட்ப எல்லையும் செயற்கை நுண்ணறிவும் மனிதனின் அறிவுத்திறனுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் என்று திருத்தந்தை சொல்கிறார். இருப்பினும், தொழில்நுட்பம் என்பது எப்போதும் மனித வாழ்வை மேம்படுத்தும் ஒரு கருவியாக மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, அது மனிதனை ஆளவோ அல்லது அடிமைப்படுத்தவோ கூடாது என எச்சரிக்கிறார். மனித அனுபவமும், ஆன்மாவும், உணர்வுகளும் இறைவனால் அளிக்கப்பட்டவை; அவற்றை ஒருபோதும் எந்திரங்களின் கணக்கீடுகளோடு (Algorithms) ஒப்பிட முடியாது என்பதை இந்த ஆவணம் வலுவாகப் பேசுகிறது.

அறிவிக்கப்படாத ஒரு முன்றாம் உலகப் போருக்கான முன்னோட்டமாக ஆங்காங்கே நடத்தப்படும் போர் யுகத்தில் ஒரு தார்மீக எச்சரிக்கை இத்திருமடலின் மிக முக்கியமான மற்றும் அவசரமான பகுதியாக தரப்படுகிறது. அது நவீன போர்களில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு

குறித்த கவலை ஆகும். போர்க்களங்களில் மனித உயிர்களைப் பறிக்கும் இறுதி முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை ஒருபோதும் எந்திரங்களிடமோ அல்லது தானியங்கி வழிமுறைகளிடமோ ஒப்படைக்கக் கூடாது என்று திருத்தந்தை உலக நாடுகளுக்கு மனிதர்கள் சார்பில் நின்று கட்டளையிடுகிறார். எந்திரங்களுக்குத் தார்மீகப் பொறுப்போ, இரக்க குணமோ கிடையாது என்பதால், இது மனித குலத்திற்கே பேரழிவை ஏற்படுத்தும் என எச்சரிக்கிறார்.

டிஜிட்டல் பொருளாதாரமும் சமூக நீதியும் நவீன டிஜிட்டல் பொருளாதாரம் புதிய தொழில்நுட்ப முதலாளித்துவத்தை உருவாக்கி, ஏழை மற்றும் உழைக்கும் வர்க்கத்தினரை மேலும் சுரண்டுவதற்குக் காரணியாக மாறிவிடக் கூடாது என்று இத்திருமடல் கவலை தெரிவிக்கிறது. தரவு (Data) மற்றும் தொழில்நுட்ப ஏகபோக உரிமைகள் மூலம் தனிமனித உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்து, பொதுநலன் மற்றும் சமூக நீதியின் அடிப்படையில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் என உலகத் தலைவர்களை நோக்கி அறைகூவல் விடுக்கிறது. மக்களின் அன்றாட மகிழ்ச்சியும் துக்கமும், வளர்ச்சியும் தளர்ச்சியும் தான் திருஅவையின் மகிழ்ச்சியும் துயரமும், வளர்ச்சியும் தளர்ச்சியும் என்று எளிய மக்களின் சார்பான திருஅவையின் நிலைப்பாட்டை உலகிற்கு எடுத்து காட்டுகிறார்.

இந்த செயற்கை நுண்ணறிவு யுகத்தில் நாம் வாழ்க்கை மீதான நம்பிக்கையை இழந்து விட வேண்டாம் என்பதையும் கோடிட்டு மக்களுக்கு காட்டுகிறார். அன்பு மற்றும் உரையாடல் சார்ந்த மாற்றுப்பாதை ஒன்றையும் அதிகார வெறி, வன்முறை மற்றும் தொழில்நுட்பக் குரோதங்கள் நிறைந்த இன்றைய உலகச் சூழலுக்கு மாற்றாக, "அன்பின் கலாச்சாரத்தை" (Culture of Love) திருத்தந்தை முன்வைக்கிறார். நாடுகளுக்கு இடையேயும், மனிதர்களுக்கு இடையேயும் திறந்த மனதுடன் கூடிய உரையாடல்களும், பரஸ்பர நீதியும், தொடர்ந்த செயல்பாடுகளும் மட்டுமே உண்மையான அமைதியைக் கொண்டுவரும். தொழில்நுட்பத்தின் வழியே மனிதர்களைத் தனிமைப்படுத்தாமல், அவர்களை ஒன்றிணைக்கும் பாலமாக அதைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை இத்திருமடல் உலகின் முன் வைக்கிறது.

Magnifica Humanitas என்னும் இந்த மடல் தனி நபருக்கும், குடும்பங்களுக்கும், திரு அவைக்கும், ஒட்டு மொத்த உலகுக்கும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி கொண்டிருக்கும் நிறுவனங்கள், அரசாங்கங்கள் என எல்லா நிலையினரின் கவனத்தையும் ஈர்த்து பொது நலனுக்காக, மானுடத்தை காப்பதற்காக அறைகூவல் விடுக்கும், எச்சரிக்கை கொடுக்கும், உடனிருந்து உரையாடி வழிகாட்டும், நம்பிக்கையூட்டும் ஒரு பல்முனை ஆவணமாகும்.

*இதன் ஒளியில் மகத்தான மானுடம் குறித்து நாம் இன்னும் தொடர்ந்து வாசிப்போம்.*

# சுடர் வாசகர் போட்டி 137

## சரியான விடைகள்

1. தொழில்நுட்பம் உண்மை, நீதி, சகோதரத்துவம், அமைதி மற்றும் முழுமையான மனித வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பதே அதன் உண்மையான அளவுகோலாகும்.
2. நேபிள்ஸ் நகரில் 1729ல் மறைப்பணியை ஆரம்பித்தார்.
3. இறைவனையும், அன்னை மரியாளையும் உறுதியாக பற்றிக் கொண்டாள்.
4. செப்பரினோ நமுங்க்குரா
5. கடவுளின் தாய் என்று அழைக்கும் முன்னரே அவருக்கு விண்ணக அரசியாக வணக்கமும், மரியாதையும் செய்துள்ளனர்.
6. உரோம் நகரில் "திபெர்" தீவில், புனித பர்த்தலமேயு பசிலிக்காவில் பாதுகாக்கப்படுகின்றன.
7. கிறிஸ்து அவரிடம் விண்ணகத்தின் திறவுகோலை ஒப்படைக்கிறார்
8. அருளாளர் மரியா ட்ரொங்காத்தி
9. 1762ம் ஆண்டு
10. யோவான்
11. 1954ம்
12. திருமுழுக்கு யோவான்.
13. நம் ஆன்மீகப் பசிக்கு விருந்து
14. ஆவியானவரின் அருட்கொடைகளைப் பெற்று அவருடைய வல்லமையில் நிலைத்திருத்தல்
15. தான் மட்டும் இறைவேண்டல் செய்ய அங்கிருந்த மலைக்குச் சென்றார்.



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A Martin, Trichy
R. Flora Mary Josephine,Tirupur
C. Pauline Soosainathan, Chengalpet

# சுடர்
## வாசகர் போட்டி
## 138



1. கொல்கத்தா நகர் புனிதர் என்றழைக்கப்படுவர் யார்?
2. இறைவன் தந்த தலையாயக் கட்டளை என்ன?
3. இறைவனை அறியமுடியாதவர் யார்?
4. அன்னை மரியாவின் பிறப்பு ஏன் அவ்வளவு சிறப்பு?
5. ஒருவரை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று இயேசு கூறினார்?
6. மீட்பின் அடையாளமாக விளங்குவது எது?
7. அன்னை மரியாவின் வியாகுலங்கள் எத்தனை?
8. "என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல" என்ற ஆண்டவரின் வார்த்தையை அறிவித்தவர் யார்?
9. மத்தேயு என்ற பெயரின் பொருள் என்ன?
10. தொன் போஸ்கோவை போல தொன் போஸ்கோவாக வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவர். அவர் யார்?
11. "பணம் பெறாத மருத்துவர்கள்" என மக்களால் அழைக்கப்பட்ட இரு புனிதர்கள் பெயரை குறிப்பிடுக?
12. வார்த்தைகளை விட செயல்களே முக்கியம் என்பதை எந்த உவமையில் இயேசு குறிப்பிடுகிறார்?
13. முப்பெரும் அதிதூதர்கள் நமக்கு நினைவூட்டுவது என்ன?
14. எபிரேயம் மற்றும் இயேசுவின் தாய்மொழியான அரமேயத்தையும் நேரடியாக இலத்தின் மொழியில் மொழிபெயர்த்த புனிதர் யார்?
15. சலேசிய அழைப்பின் முன்மாதிரியாக திகழ்ந்தவர் யார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிக்காட்டி

குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா
புனித காவல் தூதர்கள்
பொதுக்காலம் 27ம் ஞாயிறு
புனித செபமாலை அன்னை
பொதுக்காலம் 28ம் ஞாயிறு
அருளாளர் அலெக்ஸ்சாண்ட்ரீய மரிய தக்கோஸ்தா
புனித முதலாம் கனிஸ்டஸ்
இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
பொதுக்காலம் 29ம் ஞாயிறு
புனித இரண்டாம் ஜான்பால்
புனித அந்தோணி மரிய கிளாரெட்
பொதுக்காலம் 30ம் ஞாயிறு
புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் விழா
அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

இறைவன் தந்த வானத்தூதர்கள்
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
திருஅவைச் செய்திகள்

# செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | செ | | 1கொரி. 2:10-16 | லூக். 4: 31-37 |
| 02 | பு | | 1கொரி. 3: 1-9 | லூக். 4: 38-44 |
| 03 | வி | புனித பெரிய கிரகோரி | 1கொரி. 3: 18-23 | லூக். 5: 1-11 |
| 04 | வெ | | 1கொரி. 4: 1-5 | லூக். 5: 33-39 |
| 05 | ச | கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா | 1கொரி. 4: 6-15 | லூக். 6: 1-5 |
| **06** | **ஞா** | **பொதுக்காலம் 23ம் ஞாயிறு** | **I. எசே. 33: 7-9**<br>**II. உரோ. 13: 8-10** | **மத். 18: 15-20** |
| 07 | தி | | 1கொரி. 5: 1-8 | லூக். 6: 6-11 |
| 08 | செ | புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு விழா | மீக். 5: 2-5 | மத். 1: 1-16, 18-23 |
| 09 | பு | புனித பீட்டர் கிளாவர் | 1கொரி 7: 25-31 | லூக். 6: 20-26 |
| 10 | வி | | 1கொரி. 8: 1-7, 11-13 | லூக். 6: 27-38 |
| 11 | வெ | | 1கொரி. 9: 16-19, 22-27 | லூக். 6: 39-42 |
| 12 | ச | புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் | 1கொரி 10: 14-22 | லூக்.6:43-49 |
| **13** | **ஞா** | **பொதுக்காலம் 24ம் ஞாயிறு** | **I. சீஞா. 27: 30-28:7**<br>**II. உரோ. 14: 7-9** | **மத். 18: 21-35** |
| 14 | தி | திருச்சிலுவையின் மாட்சி விழா | I. எண்: 21: 4-9<br>II. பிலி. 2: 6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | செ | அன்னை மரியாவின் துயரங்கள் | எபி. 5: 7-9 | யோவா. 19: 25-27 |
| 16 | பு | புனிதர்கள் கொர்னேலியுஸ் மற்றும் சிப்பிரியன் | 1கொரி. 12:31-13:13 | லூக். 7: 31-35 |
| 17 | வி | புனித இராபெர்ட் பெல்லார்மின் | 1கொரி. 15: 1-11 | லூக். 7: 36-50 |
| 18 | வெ | | 1கொரி. 15: 12-20 | லூக். 8: 1-3 |
| 19 | ச | புனித ஜனுவாரியுஸ் | 1கொரி. 15: 35-37, 42-49 | லூக். 8: 4-15 |
| **20** | **ஞா** | **பொதுக்காலம் 25ம் ஞாயிறு** | **I. எசா. 55: 6-9**<br>**II. பிலி 1: 20-24, 27** | **மத். 20: 1-16** |
| 21 | தி | புனித மத்தேயு திருத்தூதர் விழா | எபே. 4: 1-7, 11-13 | மத். 9: 9-13 |
| 22 | செ | | நீமொ. 21: 1-6, 10-13 | லூக். 8: 19-21 |
| 23 | பு | பியத்ரெல்சினா நகர்ப் புனித பியோ | நீமொ. 30: 5-9 | லூக். 9: 1-6 |
| 24 | வி | | சஉ. 1: 2-11 | லூக். 9: 7-9 |
| 25 | வெ | | சஉ. 3: 1-11 | லூக். 9: 18-22 |
| 26 | ச | புனிதர்கள் கோஸ்மாஸ் தமியான் | சஉ. 11: 9-12: 8 | லூக். 9: 43-45 |
| **27** | **ஞா** | **பொதுக்காலம் 26ம் ஞாயிறு** | **I. எசே. 18: 25-28**<br>**II. பிலி. 2: 1-11** | **மத். 21: 28-32** |
| 28 | தி | புனிதர்கள் லாரன்ஸ் ரூய்சும் அவரது தோழர்களும் | யோபு. 1: 6-22 | மத். 12: 28-32 |
| 29 | செ | புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், ரபேல் முதன்மை வானதூதர்கள் விழா | திவெ.12: 7-12 | யோவா. 1: 47-51 |
| 30 | பு | புனித ஜெரோம் | யோபு. 9: 1-12, 14-16 | லூக். 9: 57-62 |

TO SHARE
THE LIGHT

# தீபகம் மறைப்பணி மையம் வழங்கும்

## அருளடையாளங்களின் மறைக்கல்வி (தமிழ் & English)

AVAILABLE NOW




தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**தீபகம்**

45 லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-10

தொலைப்பேசி : 044 26428162, 9940276203

TO SHARE THE LIGHT

தீபகம் தயாரிப்பு

# திருவிவிலிய கண்காட்சி



பங்கு மக்களும், மாணவ மாணவியரும் திருவிவிலியத்தைப் பற்றி எளிதாக அறிந்துக் கொள்ள விவிலிய நிகழ்ச்சிகளை படங்களாகவும், செய்திகளாகவும், விளையாட்டுகளாகவும், வீடியோ காட்சிகள், பொம்மலாட்டம் வழியாகவும், எடுத்தியம்பும் சிறந்த கண்காட்சி.

இந்த கண்காட்சியை பங்குகளிலும், பள்ளிகளிலும் அமைத்து விவிலிய அறிவையும் விசுவாசத்தையும் வளர்க்க உதவிடுவோம்.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 **Deepagam Don Bosco**

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **ஈசாக், மரிய ஜேம்ஸ், சகோ.யோவான் ச.ச**